





























21ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1459 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 22, 2024



## "கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தமிழ் இலக்கியவாதிகளோடு மாத்திரமல்ல பிறமொழி சார்ந்த இலக்கியவாதிகளோடு நட்புறவு கொண்டவராக விளங்கினார்"

### அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வில் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் புகழாரம்

"எங்கள் மத்தியில் புகழோடும் இலக்கியச் செழுமை மிக்க அறிவோடும் மொழி ஆளுமையோடு விளங்கியவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள். அன்னார் தமிழ் இலக்கியவாதிகளோடு மாத்திரமல்ல பிறமொழி சார்ந்த இலக்கியவாதிகளோடு நட்புறவு கொண்டவராக விளங்கினார் எனவே அவர்கள் தமிழ் மக்களையும் தமிழ் இலக்கியவாதிகளையும் ஏனைய சமூகங்களைச் சார்ந்தவர்ளோடு இணைக்கின்ற பாலமாக விளங்கியவர் என்றால் அது மிகையாகாது"



இவ்வாறு நேற்று மாலை மார்க்கம் நகரில் நடைபெற்ற கவிநாயகர் கந்தவனம் அவர்களது இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் புகழாரம் சூட்டினார்.

சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன் தொகுத்து வழங்கிய இந்த அஞ்சலி உரை நிகழ்வில் பலர் உரையாற்றினார்கள். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ். கனடா கவிஞர்கள் கழகத்தின் தலைவர் குமரகுரு அவர்கள் மற்றும் நுயளவ குஆ வானொலி நிறுவனத்தின் தலைவர் நடா ராஜ்குமார் உட்பட பலர் அங்கு உரையாற்றினார்கள்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)




## "எமக்காய் ஸ்காபுறோவில் அமையப்போகின்ற தமிழ் சமூக மையம் கட்டடத் தொகுதியை பூர்த்தி செய்ய வேண்டிய தார்மீகக் கடமை எம் அனைவருக்கும் உண்டு என்பதை உணரவேண்டும்"

### "தமிழ்ச் சமூக மையம்" கட்டடத் தொகுதி நிதி சேகரிப்பு குழுவின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் கனடா உதயனுக்கு தெரிவிப்பு



(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

"எமது நீண்டா கால கோரிக்கைகளின் பலனாக ஸ்காபுறோவில் அமையப்போகின்ற "தமிழ் சமூக மையம்" கட்டடத் தொகுதியை பூர்த்தி செய்ய கனடாவின் மத்திய அரசு. ஒன்றாரியோ அரசு மற்றும் ரொறன்ரோ நகரசபை ஆகிய மூன்று அரச அமைப்புக்கள் வழங்கிய ஒரு தொகை நிதி ஒதுக்கீடு எமது சமூகத்திற்கு கிட்டிய ஒரு வரப்பிரசாதமாகும். இந்த வகையில் ஸ்காபுறோவில் அமையப்போகின்ற "தமிழ் சமூக மையம்" கட்டடத் தொகுதியை பூர்த்தி செய்ய வேண்டிய தார்மீகக் கடமை எம் அனைவருக்கும் உண்டு என்பதை உணரவேண்டும். அந்த சமூக மையத் தொகுதியை பூரணமாக கட்டி முடிக்க மேலும் 30 மில்லியன் டாலர்கள் தேவைப்படுகின்றன. அந்த தொகையை நாம் எமது மக்களிடமிருந்தும் வர்த்தக நிறுவனங்களிடமிருந்தும் தான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)












# GRAND OPENING

ஸ்காபுறோவில் MARKHAM & STEELES சந்திப்புக்கு அருகில் உங்களுக்கு வசதியான சேவைகளை வழங்க ஒரே கூரையின் கீழ் இரு நிறுவனங்கள்




**SATURDAY. MARCH 16TH 2024**

## Arthie Money Transfer Service

துரித பணமாற்றுச் சேவை இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பா என அனைத்து நாடுகளுக்கும் நம்பிக்கையுடன் உங்கள் பணத்தினை அனுப்ப இன்றே வாருங்கள் அல்லது அழையுங்கள் Arthie Money Transfer Service.

உங்கள் பணத்தினை தகுந்த உத்தரவாதத்துடன் அனுப்ப மிக குறைந்த கட்டணம் $ 5.00 மட்டுமே.

## Mosley Import & Export பார்சல் சேர்விசஸ்

இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் வபாழும் உங்கள் உறவுகளுக்கு பொதிகளை அனுப்ப எம்மை அழையுங்கள். மிகக் குறுகிய காலத்திற்குள் இலங்கையில் யாழ்ப்பாணம் வவுனியா. கிளிநொச்சி. திருகோணமலை மட்டக்களப்பு மன்னார் புத்தளம் கொழும்பு என அனைத்து இடங்களுக்கும் நீங்கள் அனுப்பிவைக்கும் பொதிகளை உங்கள் உறவுகளிடத்தில் நாம் ஒப்படைப்போம் என்பதற்கு நாம் உத்தரவாதத்தை தருகின்றோம்.

கப்பல் மூலம் அனுப்ப 30 கிலோ பார்சல் ஒன்றுக்கு கட்டணம் $ 80 மட்டுமே.
விமானம் மூலம் அனுப்ப 23 கிலோ பார்சலுக்கு கட்டணம் $ 260 மட்டுமே.

உத்தரவாதத்துடன் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளின் இல்லத்திற்கே நீங்கள் எம்மிடம் ஒப்படைக்கும் பொதிகள் சென்றடைய இன்றே எம்மை அழையுங்கள்.

Markham & Steels சந்திப்புக்கு அருகில்
இலக்கம் 3331 - Unit இலக்கம் 108ல் அமைந்துள்ளது எமது நிறுவனம்.
தொலைபேசி: (416) 754-7474

GRAND OPENING
ARTHIE MONEY TRANSFER
MONEY TRANSFER SERVICE
ORANGE BUILDING
Unit 108
3331 Markham Rd,
416-754-7474

GRAND OPENING
MOSLEY IMPORT & EXPORT
WORLDWIDE PARCEL SERVICE
416-754-7474
3331 Markham Rd, Unit 108

Canada
We acknowledge the financial support of the Government of Canada

# உதயன் கதிரோட்டம்

## கனிம வளங்களுக்கு நிகரான மதிப்பு கொண்டவையா எமது கடல் வளங்களான மீன் போன்ற கடலுணவுகள்?

இந்த உலகம் தோன்றிய நாட்களிலிருந்து கடலும் கடல் சார்ந்த நிலங்களும் கடலுக்குள் செல்வங்களாக விளங்கும் மீன் போன்ற கடலுணவுகளும் உலகெங்கும் பரவிக்கிடக்கின்றன. தண்ணீருக்குள் பிறந்து வளர்ந்து நீந்தித்திரிந்து. இறுதியில் மனிதர்களுக்கு சத்தும் சுவையும் நிறைந்த உணவுப் பதார்த்தங்களாக மாறும் கடல்வளம் பற்றியதான விடயங்களை உள்ளடக்குவதே இவ்வார கதிரோட்டத்தின் நோக்கம் ஆகும்.

இதற்கான காரணம் இதுதான் என்று இந்த கதிரோட்டப் பந்திகளுக்குள் குறிப்பிடுவது தேவையற்ற ஒன்று என கருதுகின்றோம். கடந்த பல வருடங்களாக வட இலங்கையின் கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக படகுகளில் வரும் தமிழகத்தின் மீனவர்கள் இங்கிருந்து தமிழகம் நோக்கி தங்கள் கடலுணவு என்கின்ற பெரும் செல்வத்தை அள்ளிக் கொண்டு போகின்றார்கள் என்பது தினமும் நாம் முன்பக்கச் செய்திகளில் படித்து வியக்கின்ற விடயமாக மாறிவிட்டது.

இவ்வாறு தமிழகத்திலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டுப் பகுதிக்குள் அடங்கும் கடல்பகுதிகளுக்குள் கூட்டமாக வருகின்ற தமிழக மீனவர்களின் அபகரிப்பால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் இது ஒரு அத்துமீறல் என்றெல்லாம் இலங்கையின் வடக்கில் உள்ள மீனவர்களும் அவர்களின் உழைப்பைச் சுரண்டுகின்ற மீனவ முதலாளிக-ளாம் 'சம்மாட்டி'களும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.
அதேவேளையில் இலங்கையின் கடற்படையும் எல்லை தாண்டி வருகின்ற படகுகளையும் அதில் வருகின்ற மீனவர்களையும் கைது செய்தும் சிறையில் அடைத்தும். நீதி மன்றங்களில் அவர்களை குற்றவாளிகளாக முன்நிறுத்துவதுமாக நாட்கள் போராட்ட மயப்பட்டு காலங்கள் நகர்ந்து செல்கின்றன.

இங்கு குறிப்பிட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இலங்கையின் வடக்குப் பகுதியில் சாதாரண மீனவர்களை தங்கள் தொழிலாளர்களாக கணித்து அவர்கள் மூலமாக கணிசமான தொகையை தினமும் பெற்று 'கொழுத்துப் போயுள்ள சம்மாட்டி முதலாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் கடற்தொழிலுக்கு செல்லாமல். போராட்டக்களத்தில் நிற்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு யார் 'சோறு' போடுவார்கள் என்ற விடயத்தை நாம் மறந்தவர்கள் ஆகிவிடுவோம்.

இதன் மறுபக்கத்தில் மறைந்திருக்கின்ற மாயங்களை அமைச்சர்கள் தொடக்கம் அதிகாரிகள் வரையிலும் கவனிப்பதாகத் தெரியவில்லை. தற்போது இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து கடலுணவுப் பொருட்கள் மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பொதுவாக தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளுக்கு இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் அனுப்பப்படுகின்ற கடலுணவுப் பொருட்கள் எந்தக் கடலில் பிடிக்கப்பட்டவை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.
இலங்கையின் வடக்கு மீனவர்கள் இழக்கும் கடலுணவுப் பொருட்கள் தமிழ்நாட்டு சம்மாட்டிகளுக்கும் மீனவமர்களின் குடும்பங்களுக்கும் சென்று விடுகின்றன. இதனால் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கடலுணவுப் பொருட்களின் அளவும் குறைந்து அங்கு தொழிலாளர்களும் பட்டினிச் சாவுக்குள் தள்ளப்படுகின்றார்கள்.
எனவே கனம வளங்களின் விலைப் பெறுமதிகளைக் கொண்ட இலங்கையின் வடக்கு கடலுணவுப் பொருட்களை மீனவர்கள் மட்டும் இழக்கவில்லை. இலங்கை அரசாங்கமும் அதன் பொருளாதாரப் பிரிவும் இழக்கின்றன என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## யாழ்ப்பாண இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட்டு உள் நுழைய முயற்சித்த மீனவர்கள்!





இந்தியன் இழுவை மடி தொழிலுக்கு எதிர்ப்பு தெரிவித்து 22-03-2024 தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தினை யாழ்ப்பாண மாவட்ட மீனவர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரத போராட்டினை ஆரம்பித்திருந்தனர். இவ்வாறு போராட்டத்தின் ஆரம்பித்த மீனவர்கள் தமது பொறுமை இழந்து இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றதுடன் இந்திய துணை தூதரகத்திற்குள் நுழைவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.
இந்நிலையில் பொலிசார் மீனவர்களை சுமூகமான நிலைக்குள் கொண்டுவர முயன்றும் மீனவர்கள் பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போலீசார் கை விலங்கினை காட்டி மீனவர்களை அச்சுறுத்தும் விதத்தில் மிரட்டி வருகின்றனர்.
தொடர்ச்சியாக தமது வளங்கள் அளிக்கப்பட்டு வருவதாகவும் இதனை தடுத்து நிறுத்துமாறு கோரி மீனவர்கள் இவ்வாறு தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அறைகள் அல்லது முழுமையான வீடுகள் வாடகைக்கு உண்டு**

1. **Brampton** ல் **Creditview & Mayfield** சந்திப்புக்கு அருகில்
**Room for Rent or Full House for Rent**

2. **Mississauga** வில் **Britannia & Creditview** சந்திப்புக்கு அருகில்
**Room for Rent or House for Rent.**

அனைத்து வசதிகளும் உண்டு.
விபரங்களுக்கு அழைக்கவேண்டிய இலக்கம்:- **416-825-7785**

**அறையும் Basement உம் வாடகைக்கு உண்டு**

**Brampton- Woodbridge** அருகில் **Hwy 27 & Langstaff Road** சந்திப்புக்கு அருகில் ஒரு வீட்டின் மேல் தளத்தில் அறை ஒன்றும் மற்றும் அதே வீட்டில் முழுமையான **One Bed Room Basement** உம் உடனடியாக வாடகைக்கு உண்டு.
அனைத்து வசதிகளும் உண்டு
விபரங்களுக்கு அழைக்கவேண்டிய இலக்கம்:- **416-428-2141**

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

**SHIVA SUBRAMANIAM (647) 406-4868**

**Brand New Basement for Rent**

**Brand New Basement for Rent in Pickering with 3 bedrooms and 2 full washrooms. Separate walk-up entrance. Separate Laundry in basement and 1 parking included. Close to schools. 5 mins drive to Pickering Town Centre. grocery stores, Go transit and shopping.
For more information please call:
416-305-9119**

**ROHINI TAILORS & DESIGNS**

**Saree Blouse, Skirt & Blouse** மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- **Pickering**
**தொடர்புகளுக்கு:** 647 569 4794
**அல்லது** 416 438 2552

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வெடுக்குநாறி மலை விவகாரம் – மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்

பு. கஜிந்தன்




வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற பொலிஸ் அராஜகங்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மகாசிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட் - மிதுசன் -- விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய தலைவர்
கட்2 - சிந்துஜன் -- மாணவர் ஒன்றிய செயலாளர்

# வட்டுக்கோட்டை பவித்திரன் கொலை விவகாரம் – ஐந்தாவது சந்தேகநபர் அடையாளம்!

வட்டுக்கோட்டை - மாவடிப் பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் என்பவரது கொலை விவகாரத்துடன் தொடர்புபட்ட ஐந்தாவது சந்தேகநபர் இன்றையதினம் அடையாளம் காட்டப்பட்டுள்ளார்.

குறித்த இளம் குடும்பஸ்தர் கடந்த 11ஆம் திகதி வன்முறை கும்பல் ஒன்றினால் பொன்னாலை கடற்படை முகாம் அமைந்துள்ள வளாகத்தில் வைத்து கடத்தப்பட்டு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இதுவரை அறுவர் குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தவகையில் ஐந்தாவது கொலைச் சந்தேகநபருக்கான அடையாள அணிவகுப்பு இன்றையதினம் மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் ஐந்தாவது சந்தேகநபரை, உயிரிழந்தவரது மனைவி மன்றில் தோன்றி அடையாளம் காட்டியுள்ளார். அந்தவகையில் அவரையும், கைது செய்யப்பட்ட எனைனோருடன் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# வடமராட்சியில் கடல் தொழிலுக்கு சென்று காணாமல் போன மீனவர் இன்று சடலமாக மீட்பு!

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் 16.03.2024 சனிக்கிழமை அன்று கடல் தொழிலுக்கு சென்று காணாமல் போன மீனவர், 17.03.2024 அன்று சடலமாக மீட்கப்பட்டார்.

மீன் பிடிப்பதற்காக தெப்பம் மூலம் கடலுக்கு சென்றவர் காணாமல் போன நிலையில் இரண்டு நாட்களாக கடற்படையினர், மீனவர்களின் உதவியுடன் அவரை தேடி வந்தனர். அவர் பயணித்த தெப்பம் நேற்றையதினம் கரையொதுங்கியது.

இந்நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மருதங்கேணி வடக்கைச் சேர்ந்த 60 வயதுடைய முத்துச்சாமி தவராசா என்னும் குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாத மீட்கப்பட்டுள்ளார்.




# வடக்கின் கடற்றொழிலாளர்களது உணர்வுகளை நான் எப்போதும் மதிப்பவன் – உண்ணாவிரதப் போராட்டமும் வெற்றி கண்டிருக்கிறது – அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு!



வடக்கின் கடற்றொழிலாளர்களது உணர்வுகளை நான் எப்போதும் மதிப்பவன் என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்னெடுத்தவரும் உண்ணாவிரதப் போராட்டமும் வெற்றி கண்டிருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு எதராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலும் நாட்டில் நிலவும் சில பிரச்சினைகள் தொடர்பிலும் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் எல்லைத் தாண்டியதும், அத்துமீறியதும், தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைக் கொண்ட கடற்றொழில் முறைமையினாலும், பாதிக்கப்பட்டு வருகின்ற வடக்கு கடற்றொழிலாளர்களின் நிலைமைகளை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர்கள் முன்னெடுத்து வருகின்ற உண்ணாவிரதப் போராட்டமானது இன்று மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது.

இந்த விடயம் தொடர்பில் நாங்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். நேற்றும்கூட யாழ்ப்பாணத்திலே மூன்று இந்திய இழுவை மடி வலைப் படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னாரில் இரு படகுகள் பிடிக்கப்பட்டு 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் கடற்றொழில் துறை சார்ந்த அமைச்சர்கள் இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் பிரச்சினைகள் தொடர்பில் என்னுடன் கதைத்து வருகின்றனர்.

அதேபோல் இம் மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும் என்னுடன் தொடர்பு கொண்டு வருகின்றர். முதலமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடுவது தொடர்பிலும் ஒரு சூழல் உருவாகி வருகின்றது. அவர்கள் இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் மூலமான பாதிப்புகளை உணர்ந்து கொண்டிருப்பதாகவே தெரிய வருகின்றது.

எனவே, பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு சுமுகமான தீர்வினை எட்ட முடியும் என நான் எதிர்பார்க்கிறேன்.

இதேநேரம் வடக்கின் கடற்றொழிலாளர்களது உணர்வுகளை நான் எப்போதும் மதிப்பவன். அவர்களது போராட்டங்களை நான் விளங்கிக் கொள்கின்றேன்.

அவர்களது போராட்டங்கள் சிறந்த பயன்களைத் தந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன். தற்போதே அவர்களது உண்ணாவிரதப் போராட்டமும் வெற்றி கண்டிருக்கிறது. எனவே, உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறு நான் அவர்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சமுதாய பாதுகாப்பு குழுக்களிற்கான விசேட கலந்துரையாடல் இன்று பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்றது

சமுதாய பாதுகாப்பு குழுக்களிற்கான விசேட கலந்துரையாடல் பொலிஸ் மா அதிபர் தலைமையில் இடம்பெற்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய குறித்த கலந்துரையாடல் 17-03-2024 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் இடம்பெற்றது,

இக்கலந்துரையாடலில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திலான் அலஸ், விசேட அதிரடிப்படையின் கட்டளை பிரதானி பிரதி பொலிஸ்மா அதிபர் விருண ஜயசுந்தர, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், சமுதாய பொலிஸ் குழுக்களின் உறுப்பிரகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், புதிய பொலிஸ் மா அதிபருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. தொடர்ந்து அமைச்சருக்கும் வரவேற்பளிக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து, முதியவர்களிற்கான சக்கர நாற்காளிகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன், யுத்திக பிணியில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் அமைச்சர், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்டோருக்கு நினைவு சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# நாட்டை போதைப்பொருட்களில் இருந்து மீட்பதற்கான யுத்தமே யுக்திய செயற்றிட்டம்: பொலிஸ் மா அதிபர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

(17-03-2024)

போதைப் பொருட்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிப்பதே யுக்திய சுற்றிவளைப்பின் நோக்கமென பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 17-03-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொலிஸ் பிரஜைகள் குழுவினருடனான சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யுத்தத்தில் வெற்றி பெற்ற நாட்டை போதைப்பொருட்களில் இருந்து மீட்பதற்கான யுத்தமே யுக்திய செயற்றிட்டம் என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் குறிப்பிட்டார்.

யுக்திய செயற்றிட்டத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள் உரிய இலக்கின் குறிப்பிட்ட தூரத்தை அடைய முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்த நிலைமையை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இதனிடையே, யுக்திய செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து பல்வேறு கடுமையான தீர்மானங்களை மேற்கொண்டு வந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக 107 என்ற பொலிஸ் அவரச தொலைபேசி இலக்கம் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது.

24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்கும் 107 என்ற துரித இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை முற்றிலும் தமிழ் மொழியில் செயற்படுத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.



# அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரி பழ விற்பனை அமோகம்

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக கரையோர பகுதி பிரதான வீதியோரங்களில் வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்படுவதுடன் மக்களும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதை காண முடிந்தது.

குறிப்பாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளில் வெள்ளரிப்பழத்தை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தை தடுக்கும் பொருட்டு வெள்ளரிப்பழம் சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டு வருகின்றனர்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரி பழத்திற்க்கு சிறந்த கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், 300 ரூபாய் முதல் சுமார் 1000 ரூபாய் வரை இவ் வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வகை பழம் பெரும்பாலும் வெப்பமான காலங்களிலேயே அதிகமாக விளைச்சலாகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டு வருவதுடன், ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது.

இதேவேளை கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் இளநீர், தோடை, குளிர்பானம் செய்யும் விற்பனை நிலையங்கள் அதிகமாக காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு தேர்தல் மூலமாக புதிய தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தெரிவு

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2024-25 ஆம் ஆண்டுக்கான தலைவராக தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஐ.றைசுல் ஹாதி தெரிவாகியுள்ளார்.

இலங்கையின் 60 வருட வரலாற்றைக் கொண்ட கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2024-25 ஆண்டுக்கான வரலாற்றில் முதல் தடவையாக சங்கத் தலைவரை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் போது தலைவர் தெரிவிற்காக சட்டத்தரணிகளான ஐ.றைசுல் ஹாதி மற்றும் ஆரிப் சம்சுதீன் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி அதிகளவான வாக்குகளை பெற்று கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தெரிவானார். மேற்படி புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் கல்முனை மாவட்ட நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றதுடன் தொடர்ந்து இவ் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது நடப்பு வருடத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

தொடர்ந்து செயலாளராக சட்டத்தரணி ரோசன் அக்தரும், பொருளாளராக சட்டத்தரணி என்.ஏ.எம். அஸாம் ஆகியோரும் ஏகமனதாக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இதர பதவி நிலைகளுக்கும் ஏனைய நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் திருநெல்வேலி ள்ள கழழன உவைல யில் காலாவதியான பொருட்கள் – உரிமையாளருக்கு தண்டம்



திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் பொது சுகாதார பயிலுனர்கள் கோபிறாஜ், லிங்கேஸ், சஜீவன், றொய்ஸ்ரன் ஆகியோர் இணைந்து திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள கழழன உவைலகளை பரிசோதித்தனர்.

இதன்போது திகதி காலாவதியான பொருட்கள், வண்டு மொய்த்து பழுதடைந்த பொருட்கள் மற்றும் உரிய சுட்டுத்துண்டு இடப்படாத பொருட்கள் என்பன இரு கழழன உவைல இல் கைப்பற்றப்பட்டது.

குறித்த கழழன உவைல உரிமையாளர்களுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை மேலதிக நீதவான் நீதிமன்றில், பா. சஞ்சீவனால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன் போது ஒருவர் வருகைதரவில்லை. மற்றையவருக்கு எதிராக 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில் தண்டப்பணமாக 180,000/= அறவிடப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

# சிறிய செயற்திட்டங்கள் ஊடாக பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் – வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், சிறியசெயற்திட்டங்கள் ஊடாக பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் தெரிவித்துள்ளார். இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான ரோட்டரி கழகத்தின் தலைவர் தெரிவு மற்றும் பயிற்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் இவ்விடயத்தை குறிப்பிட்டார்.





போலியோ தடுப்பு மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் சிகிச்சை உள்ளிட்டசிறந்த சேவைகளை ரோட்டரி கழகம் முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சி அளிப்பதாக ஆளுநர் கூறியுள்ளார்.

வசதிகள் இல்லாத மாணவர்கள் பாடசாலை கல்வியை தவிர்த்து வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் கற்றல் வசதிகள் இல்லாதவர்களை அடையாளம் கண்டு ரோட்டரி கழகம் உதவ முன்வந்துள்ளது. இந்த செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்ததோடு, கல்வியால் முழு சமூக கட்டமைப்பையும் மாற்ற முடியும் என ஆளுநர் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டின் வட முனையில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு பாரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதற்கான தேவை உள்ளதாகவும், அதற்கான சிறிய செயற்திட்டங்களை முன்னெடுக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

# சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதானம் திறப்பு விழாவும் இல்ல விளையாட்டுப் போட்டியும்



சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் புதிய விளையாட்டு மைதானம் திறப்பு விழாவும் இல்ல விளையாட்டுப் போட்டியும் கடந்த 15.03.2024 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் திருமதி. கலைவாணி அருள்குமரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சங்கானை கோட்ட கல்வி அதிகாரி திரு. நோபேட் உதயகுமார் அவர்கள் பிரதம விருந்தினராகவும், முன்னாள் இவ் வித்தியாசாலை அதிபரும், தற்போதைய மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபருமான பா. பாலசுப்ரமணியம் அவர்கள் சிறப்பு விருந்தனராகவும், கனடாவில் இருந்து வருகை தந்த உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினரும் ஓய்வு பெற்ற கணக்காய்வாளரும் பழைய மாணவருமான சு. உமாசுதான் மற்றும் ஓய்வுபெற்ற வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளரும், பொறியியலாளரும் பழைய மாணவருமான திரு. பூ. சிவநேசன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

பொது விளையாட்டு மைதானம்

சித்தன்கேணியில் நீண்ட காலமாக பொது விளையாட்டு மைதானம் இல்லாத குறையினை கனடா சித்தன்கேணி ஒன்றிய மக்களின் முயற்சியால் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகம், ஸ்ரீ கணேசா வித்தியாசாலை மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்க பாலர் பாடசாலைக்கு பொதுவான ஓர் விளையாட்டு மைதானமாக சிங்கப்பூரில் வசிக்கும் திருமதி. சரோஜினி பரமநாதன் அவர்கள் தமது பெற்றோர்களான அமரர்கள் முத்துலட்சுமி அப்பையா நினைவாக வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கு கௌரவம்

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாகைலயில் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற இரு மாணவர்களுக்கும் 14.03.2023 வியாழக்கிழமை உலக சித்தன்கேணி ஒன்றிய உறுப்பினர்களான சிவபாதம் அருணேஸ்வரன் (சிட்னி) மற்றும் கமலநாதன் குமரன் (பாரிஸ்) ஆகியோரினால் இரண்டு புதிய துவிச்சக்கர வண்டிகள் பரிசாக வழங்கி ஊக்கிவிக்கப்பட்டது. அத்துடன் வெட்டுப்புள்ளிக்கு மிக நெருங்கிய இரு மாணவர்களுக்கு தலா ரூபா 5000. சித்தன்கேணி உலக ஒன்றிய உறுப்பினர்களினால் வழங்கி ஊக்கிவிக்கப்பட்டது.







# மீண்டும் மீண்டும் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவது ஏன் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது?

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி வந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 31பேர் கடந்த செவ்வாய் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் 3 படகுகளில் வந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 25 மீனவர்களும், 2 படகுகளில் வந்து மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ஆறு மீனவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை - மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் யாழ்ப்பாண மாவட்ட நீரியல்வள திணைக்களத்தினர் மீனவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Head-aches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பொருளாதார நெருக்கடிகளுடன் வாழ்ந்துவரும் மாணவர்களுக்கு அமைச்சரால் வழங்கப்பட்ட உதவியானது காலமறிந்து செய்யும் மற்றுமொரு பேருதவியாக அமைகின்றது

## - நெடுந்தீவின் கல்விச் சமூகம் சுட்டிக்காட்டு!



யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தீவக மக்களுக்கும் அப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் ஓர் இரட்சகராகவே இருந்து வந்துள்ளார் என தெரிவித்துள்ள நெடுந்தீவின் கல்விச் சமூகத்தினர் அமைச்சரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் மக்களின் நலன் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேசிய கடற்தொழில் தினத்தை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் கடற்றொழில் அமைச்சின் நெடுந்தீவு பிரதேசத்தை உள்ளடக்கிய 8 பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் வழங்கிவைக்கப்பட்டது.

இவ்விகழ்வுகளின் போது பாடசாலைகளின் கல்விச் சமூகத்தினரால் அமைச்சரின் குறித்த நடவடிக்கைகளுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்ட அதேநேரம் அமைச்சரது கடந்தகால தூரநோக்குள்ள மக்கள் மற்றும் மாணவர் நலன்சார் செயற்றிட்டங்கள் குறித்தும் நினைவுகூர்ந்திருந்தனர்.

குறிப்பாக பொருளாதார ரீதியில் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களின் நலன்களை பல்வேறு வழிகளில் தீர்வுகண்டுகொடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் அமைச்சர் தீவக பகுதியின் நலன்களில் ஏனைய பகுதிகளை விட சற்று அதிக அக்கறையுடன் ஈடுபட்டுவருவதை காலாகாலமாக பார்க்க மடிகின்றது.

அதேநேரம் அமைச்சரின் இத்தகைய செயற்பாடுகளுக்கு தீவக மக்களும் தமது நன்றியுணர்வுகளை அமைச்சருக்கு காட்டி வருகின்றனர்.

மேலும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுடன் வாழ்ந்துவரும் மாணவர்களுக்கு தற்போது அமைச்சரால் வழங்கப்பட்ட இந்த கற்றல் உபகரண உதவியானது காலமறிந்து செய்யும் பேருதவியாகவும் அமைகின்றது.

இதேவேளை தற்போது பொருளாதார நெருக்கடி பல மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது.

எனவே எமது பிரதேச மாணவர்களின் கல்வி சீராக முன்னெடுக்கப்படுவதற்கு மாணவர்களுக்கான வசதி வாய்ப்புகள் மேலும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்பதாக கடற்தொழில் அமைச்சினால் பல்வேறு மக்கள் நலன்சார் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் எண்ணக்கருவிற்கமைய விசேட ஏற்பாட்டின் ஊடக பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கிளிநொச்சி – கண்டாவளை பிரதேச ரங்கன் குடியிருப்பு மக்களின் நீண்டநாள் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு



ரங்கன் குடியிருப்பு பிரதேச மக்களின் நீண்டநாள் போக்குவரத்து சேவை பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரங்கன் குடியிருப்பு கிராமத்தில் உள்ள மக்கள் போக்குவரத்து சேவை இன்றி அவதிப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில், நீண்ட காலத்தின் பின் பேருந்து சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரின் இணைப்பாளர் ரட்ணம் அமீர் கலந்து கொண்டு குறித்த பேருந்து சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நீண்ட காலமாக மக்கள் தமது கிராமத்திற்கான பேருந்து சேவையை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தமைக்கமைய, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் குறித்த தனியார் பேரூந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயக க்கட்சியின் கண்டாவளை அமைப்பாளர், பாடசாலையின் அதிபர் பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.




THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பேரனுக்காக மிகவும் சிறிய முச்சக்கர வண்டி ஒன்றை தயாரித்த சிறுவனது "தாத்தா"

பு. கஜிந்தன்



பேரனுக்காக யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட உலகிலேயே மிகவும் சிறிய முச்சக்கர வண்டி தற்போது சிறுவனது விளையாட்டுப் பொருளாக மாறியுள்ளது.

மேற்படி "தாத்தா" தனது பேரனின் முதலாவது பிறந்தநாளுக்கு பரிசளிப்பதற்காக மிகவும் சிறிய முச்சக்கர வண்டி ஒன்றினை தயாரித்துள்ளார்.

இந்த முச்சக்கர வண்டியானது முற்றிலும் சாதாரண முச்சக்கர வண்டி போலவே தோற்றமளிக்கிறது. இதற்கு மோட்டார் பொருத்தினால் இயங்கக் கூடியவாறு இருக்கும் என இதனை உற்பத்தி செய்தவர் கூறுகின்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த முச்சக்கர வண்டி போல முச்சக்கர வண்டியை செய்து தருமாறு கூறி பலர் என்னை தொடர்பு





கொண்டனர். அவ்வாறு தயாரித்து கொடுப்பதாக இருந்தால் என்னால் உடனடியாக தயாரித்து கொடுக்க முடியாது. சிறிது நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். ஏனெனில் முச்சக்கர வண்டிகள் திருத்தம் மற்றும் ஏனைய வேலைகளுக்கு எனது வாடிக்கையாளர்கள் வருவார்கள். அவர்களது வேலைகளை செய்துவிட்டு நேரம் கிடைக்கும் போதே இதனை செய்து கொடுப்பேன்.

இதனை செய்வதற்கு எனக்கு 25 நாட்கள் தேவைப்பட்டன. சிறுவர்களுக்கான ஏனைய வாகனங்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால் சிறுவர்களுக்கா முச்சக்கர வண்டி விற்பனை செய்யப்படுவதில்லை. என்னுடைய வேலையும் முச்சக்கர வண்டி திருத்துவது தான். ஆகையால் முச்சக்கர வண்டியினை தயாரித்துள்ளேன். முழுவதும் கையாலேயே இந்த முச்சக்கர வண்டியினை தயாரித்து முடித்துள்ளேன். இதற்கு எனது மகன்களும் உதவி செய்தார்கள்.

கடையில் விற்பனை செய்யப்படும் சிறுவர்களுக்கான வாகனங்கள் பிளாஸ்டிக்கில் செய்வதால் அது இலகுவில் உடைந்துவிடும். ஆனால் இது இரும்பு மற்றும் தகரத்தினால் உருவாக்கப்பட்டது. ஆகையால் இலகுவில் உடையாது. பல ஆண்டுகளுக்கு பாவனையில் இருக்கும். இதனை உருவாக்க எனது கூலி தவிர ஒரு இலட்சத்து எழுபத்து ஐயாயிரம் ரூபா செலவாகி இருக்கும் என்றார்.

இந்த முச்சக்கர வண்டியை பார்வையிடுவதற்கு ஏராளமானோர் வருகை தருவதை அவதானிக்க முடிந்தது.

# வெடுக்குநாறிமலை கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்பு போராட்டம்!



தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் அரச அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலைக்கழக மூன்றலில்






கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நண்பகல் 12:00 மணி அளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், தமிழர்களுக்கு எதிராக இடம் பெறும் அரச அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இப் போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடபகுதி சுற்றுலாத்தலங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்படுகிறன என்கிறார் அலஸ்ரின்



தென்பகுதியிலும் பார்க்க வடபகுதியில் அதிகளவான அழகிய சுற்றுலாத்தலங்கள் காணப்படுகின்றது. ஆனால் அவை அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்படுகின்றதாக வலையொளியாளர் திரு. அலஸ்ரின் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இருபத்து ஐந்து மாவட்டங்களுக்கும் முச்சக்கர வண்டியில் சுற்றுலா மேற்கொண்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களுக்கும் முச்சக்கர வண்டியில் சுற்றுலா சென்று விட்டு 37-வது நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி உள்ளோம். கிட்டத்தட்ட 6000 கிலோ மீட்டர்களுக்கு மேலாக நமது பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

வடபகுதியையும் பார்க்கிலும் தென்பகுதியில் அதிக சுற்றுலா பயணிகளை பார்க்கக் கூடிய மாதிரி இருந்தது. அந்த வகையில் வடபகுதியானது சுற்றுலா துறையில் பின்தங்கி இருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நாங்கள் அங்கு பார்வையிட்ட இடங்களை விட எமது வடக்கு - கிழக்கில் அழகான இடங்கள் ஏராளமாக உள்ளன. ஆனால் அதனை சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு முன் வந்து செய்வதற்கு நாங்கள் யாருமே தயாராக இல்லை. அப்படி செய்தால் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை எமது பகுதிகளுக்குள் ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

தற்போது இலங்கைக்கு அதிகமான வருமானத்தை ஈட்டி தருவது சுற்றுலா துறையாக தான் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையால் இதனை மாற்ற முடியும் என நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் சுற்றுலா துறையால் ஒரு வரலாற்றையே மாற்றுவதற்கு முடியும்.

தென்பகுதிக்கு நாங்கள் செல்லும்போது அங்கே சுற்றுலா வழிகாட்டி ஒருவர் இருப்பார். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்த இடத்திற்கு வருகை தந்து சுற்றுலாத்தலங்கள் பற்றி கேள்வி எழுப்பும் போது குறித்த வழிகாட்டி அதற்கு பதில் அளிப்பதை முழுமையாக நம்பிக் கொண்டு அவர்கள் அடுத்த தலைமுறைக்கு அதனை கொண்டு சேர்ப்பார்கள். அதேபோல நாங்கள் வடபகுதியில் உள்ள வரலாற்று சின்னங்களையும், அடையாளங்களையும் பாதுகாத்து, சுற்றுலா பயணிகளை கவர்ந்து அவர்களிடத்து நமது வரலாறுகளை கடத்தக்கூடிய ஒரு சக்தி சுற்றுலாத்துறைக்கு இருக்கின்றது.

சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல விடயங்களை முன்னெடுப்பதற்கு நாங்களும் ஆவலாக இருக்கின்றோம். தற்போது நாங்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும், எந்தவிதமான தடைகளும் இன்றி இலகுவாக செல்லக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகளும் எமது நாட்டுக்கு வருகை தந்து எமது நாட்டின் சுற்றுலா தளங்களை பார்வையிடுவதன் மூலம் நமது நாட்டு அந்நிய செலாவணியும் அதிகரிக்க கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்றார்.

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையே சந்திப்பு!



சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்திய ஆயுதம் மற்றும் பாதுகாப்பு படைகளின் பிரதிநிதியும், மட்டக்களப்பு மாவட்ட உப அலுவலகத்தின் தலைவருமான அலெக்ஸாண்டர் புரோவ் (Aleksandr Burov), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை, யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் 19.03.2024 அன்று சந்தித்து கலந்துரையாடினார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் எதிர்கால நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பில் இதன்போது கௌரவ ஆளுநருடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன் ஆற்றிய சொற்பொழிவு நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்குமாம் – யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திடமும் விசாரணை!



இன நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் சொற்பொழிவாளருமான ச.லலீசன், இளைஞர்களிடையே இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் தமிழ் இளைஞர்களை எழுச்சி கொள்ளத் தூண்டும் வகையில் கருத்துகளைத் தெரிவித்திருந்தார் என்று கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கல்விஅமைச்சு விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெற்றிருந்தது. இதனடிப் படையில், இன நல்லிணக் கத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான நிகழ்வை எவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தலாம் என்பது தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா

இலங்கை செய்திகள் Sri Lanka News



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) கோலாகலமாக நிகழ்ந்தேறியுள்ளது. மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது. 2023ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்துகொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எம்.எஸ்.ஏ. கலீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இவ் விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 200 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் தங்கப்பதக்கம் வழங்கியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த் ஆனந்தஜோதி அபிஷாகர், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியைச் சேர்ந்த சுதர்சன் வியாசகன் ஆகிய இருவரும் வெள்ளிப்பதக்கங்கள் வழங்கியும், மூன்றாம் இடத்தைப்பெற்ற ஓட்டமாவடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த முஹம்மட் முஸ்தபா மஹார் அஹமத் வெண்கலப் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை கொழும்பைச் சேர்ந்த செல்லப்பா கிருபானந்தமூர்த்தி பெற்றிருந்தார். இவருக்கு விருதோடு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. மேலும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவராவதானி-களாகவும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ் விருதுகள் வழங்கும் விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.






# இலங்கை நாடாளுமன்றத்தில் திடீரென வடக்கு கிழக்கு, மலையக தமிழ் கட்சிகள் இணைந்து ஆர்ப்பாட்டம் லக்ஸ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாச ஆதரவு சுமந்திரன் தலைமறைவு



## 19-03-2024 செவ்வாய்க்கிழமையன்று இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகள் ஆர்ப்பாட்டம்

19-03-2024 செவ்வாய்க்கிழமையன்று இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை திடீரென நடத்தின. இந்த உற்சாகமான செயற்பாடு பெரும்பான்மை இன உறுப்பினர்களை ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தியது.

வெடுக்குநாறிமலை சிவன் கோவில் விவகாரத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுவிக்ககோரி இந்தப் போராட்டம் நடைபெற்றது. மதச்சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு, மலையக தமிழ் கட்சிகள் ஆர்பாட்டம் செய்த போது லக்ஸ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாச ஆதரவு ஆகிய சிங்களத் தலைவர்களும் தங்கள் ஆதரவை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கிருந்து தலைமறைவானார் என்றும் அறியப் படுகின்றது. இந்த போராட்டத்தின்போது சஜித் பிரேமதாச அவர்கள் சிங்கள் உறுப்பினர்களுக்கு எதிராக கண்டனங்களைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சிவராத்திரிக் கைதும் ஒன்று திரண்ட தமிழ்க் கட்சிகளும்



**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**க**டந்த 15 ஆண்டுகளாக தமிழ்த் தரப்பை ஒன்றாக்குவது பெரும்பாலும் எதிர்த் தரப்புத் தான். வெடுக்குநாறி மலை விவகாரம் பெரும்பாலான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றுபடுத்தியிருக்கிறது. போராட்டக் களத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பரவாயில்லை. குறைந்தது ஒரு விவகாரத்தை மையமாகக் கொண்டாவது கட்சிகள் அவ்வாறு ஒன்றாகத் திரள்வது நல்லது. ஆனால் இந்த விவகார மைய ஐக்கியம் மட்டும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டப் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற அடிப்படையில் கட்சிகள் ஒன்றிணையும் போதுதான் கடந்த 15 ஆண்டு காலத் தேக்கத்தில் இருந்து விடுபடலாம். அல்லது அவ்வாறு கட்சிகளை ஒன்றிணைக்கத்தக்க பலத்தோடு ஒரு கட்சி பலமானதாக மேற்கிளம்ப வேண்டும். அல்லது கட்சிகளை ஒன்றிணைக்கவல்ல பலத்தோடு சிவில் சமூகங்கள் மேலெழ வேண்டும்.

எதுவாயினும் சிவராத்திரியன்று கைது செய்யப்பட்டவர்களை மீட்பதற்காக கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டது வரவேற்கத்தக்கது. இது போன்ற "கலெக்டிவ்" ஆன அதாவது கூட்டு முயற்சிகள்தான் பொதுப் பிரச்சினைகளுக்கு வெற்றியளிக்கும் என்பதற்கு இங்கு அரசியல் அல்லாத வேறு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

எங்களில் எத்தனை பேர் தமது வீடுகளில் உள்ள தென்னை மரங்களில் விளைச்சல் குறைந்து வருவதை அவதானித்திருக்கிறோம்? தென்னை இலைகளில் மேற்பரப்பில் கருப்பாக எண்ணெய்த் தன்மையோடு ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஓலைகளின் கீட் பகுதிகளில் பூஞ்சனம் போல வெள்ளையாக ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. அது தென்னை மரங்களில் இருந்து தொடங்கி மாமரம், கறிவேப்பிலை, வாழை என்று எல்லா மரங்களின் மீதும் பரவுகிறது. ஒரு வீட்டில் மட்டுமல்ல, ஒரு கிராமம், ஒரு பிரதேசம் முழுவதும் அது பரவி வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் அதன் தாக்கம் இருப்பதாக அண்மையில் முகநூலில் ஒரு குறிப்பைக் காண முடிந்தது. 1976 ஆம் ஆண்டு இப்படி ஒரு தாக்கம் ஏற்பட்டது என்றும் அது பின்னர் கட்டுப்படுத்தப்பட்டது என்றும் கிளிநொச்சியில், அக்கராயன் கோணாவில் பகுதிகளில் உள்ள தென்னந் தோட்டப் பண்ணையாளர்கள் தெரிவிக்கிறார்கள். புத்தளம் மாவட்டத்தில் தங்கொடுவ, நாத்தாண்டிய, சிலாபம், முகுனுவடவன, ஆரியகம, பட்டுலுஓயா மற்றும் முந்தலம ஆகிய பிரதேசங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. தீவிரமாகப் பரவும் வெள்ளை ஈயினால் இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந் தோப்புகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக பல மாதங்களுக்கு முன்னரே நான் சம்பந்தப்பட்ட சிலரோடு அணுகிக் கதைத்தேன். சுற்றுச் சூழலியலாளர் ஒருவரை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வந்து தென்னோலையைக் காட்டினேன். என்னுடைய நண்பர் ஒருவர் எனக்கு முகநூலில் அது தொடர்பாக வெளிவந்த ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார். அது வெள்ளைத் ஈயின் தாக்கம் என்றும் அவர் கூறினார். அதற்கு இயற்கை வழி நிவாரணமும் உண்டு இரசாயன வழி நிவாரணமும் உண்டு என்றும் அவர் கூறினார்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனம் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் மற்றும் சோப்புத் தூள் கலவையை தெளிக்க ஏற்பாடு செய்துள்ளதாக விவசாய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், பருவ மழை வந்தது. வருண பகவான் தென்னை மரங்களைக் குளிப்பாட்டிச் சுத்தப்படுத்தினார். வெள்ளை ஈ மழை நீரில் கழுவுண்டு போயிற்று. ஆனால் மழை முடிந்த கையோடு அது மீண்டும் வந்தது. கோடை வெயிலோடு முன்னரே விட வேகமாகப் பரவியது. இப்பொழுது நான் வசிக்கும் கிராமமும் உட்பட யாழ்ப்பாணத்தில் தென்னை மரங்கள் செறிவாகக் காணப்படும் எல்லா வீடுகளிலும் பகுதிகளிலும் வெள்ளை ஈ வேகமாகப் பரவி வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை விருதுகள் வழங்கும் நிகழ்வு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் பேசிய அந்த அமைப்பின் தலைவராகிய ஐங்கரநேசன் வெள்ளை ஈ தொடர்பாகவும் சுட்டிக் காட்டினார். வெள்ளை ஈ யை கட்டுப்படுத்துவதற்கு ஒஸ்ரேலியாவைச் சேர்ந்த ஒரு தமிழர் கூறிய ஒரு பரிகாரத்தை அவர் மேடையில் வைத்துச் சொன்னார். எமது வீடுகளில் நாங்கள் பயன்படுத்தும் சலவைத் தூளில் ஒரு மேசைக் கரண்டியை எடுத்து 4 லிட்டர் நீரில் கரைத்த பின் அதனை தென்னை மரங்களுக்கு பீச்சி அடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் அதற்கு உயர் அழுத்தப் பம்பிகள் தேவை. சீனாவில் இருந்து அப்படிப்பட்ட பம்பி ஒன்றை கிட்டத்தட்ட 40,000 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய முடியும் என்று ஒரு வணிகர் கூறினார்.

அதைவிட முக்கியமான ஒரு பிரச்சினை உண்டு. வெள்ளை ஈயை ஒரு வீட்டில் மட்டும் கட்டுப்படுத்தி பிரயோசனமில்லை அல்லது ஒரு பண்ணையில் மட்டும் கட்டுப்படுத்தி பிரயோசனம் இல்லை. ஏனென்றால் இது ஒரு கூட்டுத் தாக்கம். ஒரு கூட்டுத் தாக்கத்துக்கு எதிராக் ஒரு பொது எதிரிக்கு எதிராக கூட்டு முடிவு எடுக்கப்பட வேண்டும். கூட்டாக ஒரு கிராமம் முழுவதிலும் வெள்ளைத் ஈ யை கட்டுப்படுத்த வேண்டும். கூட்டுப் பிரச்சினைகளுக்கு கூட்டத் தீர்வுகளே உண்டு. இது வெள்ளை ஈ க்கு மட்டுமல்ல இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல அரசியலுக்கும் பொருந்தும்.

வெள்ளை ஈயின் விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மட்டுமல்ல பண்ணையாளர்கள் மற்றும் வீடுகளில் செறிவாகத் தென்னை மரங்களை வளர்ப்பவர்கள் எல்லோருக்குமான பிரச்சினை இது. இதை இப்படியே விட்டால் ஒரு கட்டத்தில் தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்படும். அது நேரடியாக வயிற்றில் அடிக்கும்.

இறுதிக்கட்டப் போரில் தேங்காய்க்கு அலைந்த ஒரு மக்கள் கூட்டம் நாங்கள். இறுதிக் கட்டப் போரில் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆனந்தபுரத்தில் நடந்த சண்டையோடு பெரும்பாலும் தேங்காய் இல்லாமல் போய்விட்டது. முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தென்னைகள் இருந்தன. ஆனால் அங்கிருந்த அசாதாரண சனத்தொகைக்குப் போதுமான தேங்காய்கள் இருக்கவில்லை. ஆனந்தபுரத்தில்தான் ஒப்பீட்டளவில் அதிக தென்னை மரங்கள் இருந்தன. ஆனந்தபுரத்தை இழந்ததோடு தேங்காய்த் தட்டுப்பாடு தொடங்கியது. அதன் பின் முள்ளிவாய்க்கால் கஞ்சிக்குத் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக பால்மாவை பயன்படுத்தப்பட்டது. ஒரு கஞ்சிக்கலயத்துக்கு இரண்டு பால்மா பக்கெட்டுகள்.

அது போர்க்காலம். ஆனந்தபுரத்தோடு தேங்காய் இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது 15 ஆண்டுகளின் பின் வெள்ளை ஈ ஏறக்குறைய ஒரு போரைத் கொடுத்திருக்கிறது. அது ஒரு கூட்டுத் தாக்கம். இத்தாக்கத்திலிருந்து தென்னை மரங்களைப் பாதுகாக்கத் தவறினால் தேங்காய்க்கு அலைய வேண்டி வரும். தேங்காய் எண்ணையின் விலை கூடும். எல்லா உணவுப் பொருட்களின் விலையும் கூடும். பொருளாதார நெருக்கடிக்கு முன்னரே தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துவிட்டது. இப்பொழுது சுத்தமான எண்ணெய் ஒரு லிட்டர் 600 ரூபாயிலிருந்து 900 ரூபாய் வரை போகிறது.

நுகர்வுக் கலாச்சாரத்துள் சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்திய நல் விளைவுகளில் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் தேங்காய் எண்ணையின் தரம் குறித்த சந்தேகங்கள், சமூக வலைத்தளங்களில் பரவலாக வரத் தொடங்கிய ஒரு பின்னணியில், வீட்டில் தென்னைகளை வளர்ப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயைத் தாங்களே உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். அது ஒரு அற்புதமான செயல். யாழ்ப்பாணத்தில் அதிகம் தென்னை மரங்களைக் கொண்ட காணிகளை வைத்திருப்பவர்கள் தங்களுக்கு தேவையான தேங்காய் எண்ணெயை பல் பொருள் அங்காடிகளில் வாங்குவதைத் தவிர்க்கத் தொடங்கினார்கள்.

ஆனால், இப்பொழுது வெள்ளை ஈ எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. வெள்ளைத் ஈ யை கூட்டாக எதிர்கொள்ளத் தவறினால், தேங்காயின் விலை அதிகரிப்பதைத் தடுக்க முடியாது. எனவே உடனடியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் பாதிக்கப்பட்டவர்களும் இணைந்து கூட்டாக முயற்சிக்க வேண்டும். இது விவசாயம் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் மட்டுமல்ல. இங்கேயும் அரசியல் உண்டு. சமூகத்தின் கூட்டுச் செயற்பாடுகள் என்று வரும்பொழுது, அதில் ஏதோ ஒரு விகிதமளவுக்கு அரசியல் இருக்கும். சமூகம் முழுவதுமான கூட்டுச் செயல்பாடுகளில் சில சமயம் அரசியல் தலைமைத்துவம் தேவையாக இருக்கும்.

கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் இதில் இறங்க வேண்டும். இது தமிழ்ச் சமூகத்தின் உள்ளூர்ப் பொருளாதாரத்தைப் பாதிக்க கூடிய ஒரு விடயம். இதில் அரசியல் கட்சிகளும் கிராமிய அமைப்புக்களும் குடிமக்கள் சமூகங்களும் ஊடகங்களும் ஒன்றிணைய வேண்டும்.

-----------------------------------------------

## நுணாவில் தந்த நூதனக் கவிஞன்

--------------------------------

கவிஞர் கந்தவனம் என்ற கனவான்
நுணாவில் தந்த நூதனக் கவிஞன்
விநாயகர் மகனாய் நுணாவிலில் விளைந்தவர்
புவியியல் பட்டத்தை இந்தியாவில் பெற்றே
இலங்கையில் ஆசிரியராய் இங்கிதமாய்ப் பணியாற்றி
மாணவர்கள் பலரை மாணிக்கமாய் மாற்றியவர்
அருணோதயாக் கல்லூரியில் அதிபராய் மிளிர்ந்தவர்
குரும்பசிட்டி தந்த குணவதியாம் தவமணியை
விருப்போடு கைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்துமே
தங்கம்போல் செல்வங்கள் இருவருக்குத் தந்தையாகி
குடும்பத்தின் தலைவனாய்க் குன்றின்மேல் நின்றவர்
கவிஞர்பலரை தாயகத்தில் கவனமாக உருவாக்கி
கவியரங்கம் பலவற்றைக் கருத்தோடு நடாத்தியவர்
கவிஞர் கழகமொன்றைக் கனடாவில் கருவாக்கி
அலெக்ஸாண்டர் ஆசானுடன் இணைந்து உருவாக்கி
கவிஞர் பலரைக் கச்சிதமாய் உருவாக்கியவர்
நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை உருவாக்கி
கவிதை இலக்கணத்தைக் களங்கமின்றித் தந்தவர்
ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆளுமை மிக்கவர்
கனடாவின் தேசியகீதத்தைக் கருத்துக் குறையாமல்
கன்னித் தமிழில் கவியாக்கித் தந்தவர்
கீதவாணி வானொலியில் கிழமை தோறும்
காதலாகப் பேசும் கடமைவீரன் போல் ஜோசேப்புடன்
கடந்த பலவாண்டாய்க் கவியரங்கம் நடாத்தியே
கவிஞர் பலரை கவிபாட ஊக்குவித்தவர்
கவிஞர் கழகத்தைப் போசகராய்க் காத்தவர்
வயதும் போய்விட வருத்தங்கள் வருத்தினாலும்
வாலிப மிடுக்கோடு வலம் வந்தவர்
எம்மை விட்டுப் பிரிந்து இறைவனிடம் சென்றுவிட்டார்.
அன்னாரின் ஆன்மா சாந்திபெற
எல்லோர்க்கும் பொதுவான இறைவனை இறைஞ்சுவோம்.

--------------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# தமிழரசுக் கட்சிக்குள் "தனி ஒருவனா?"

**"ஜனாதிபதியை தமிழரசுக்கட்சி சந்தித்த போது அந்த சந்திப்பை புறக்கணித்த சுமந்திரன், ஜனாதிபதியின் அடுத்த சந்திப்புக்கான தமிழரசுக்கட்சியின் தலைவருக்கான அழைப்பை கட்சியும் தலைவரும் புறக்கணித்தபோது "தனி ஒருவனாக" பங்கேற்றது ஏன்? சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச்செய்யும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுப்பதுடன் கட்சிக்கு முரணாகவும் செயற்படும் நிலையில் இதுவரையில் கட்சி ரீதியாக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமை ஏன்?"**

**- கே. பாலா**

இலங்கை தமிழரசுக்கட்சி உட்கட்சி முரண்பாடுகளினாலும் பதவி ஆசைகளினாலும் காணாமல் போய்க் கொண்டிருந்தாலும் சர்ச்சைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் நீயா, நானா கௌரவப் பிரச்சினைகளுக்கும் மட்டும் குறைவில்லை. அண்மைக்காலமாக இப்படியான சர்ச்சைகள் பெரும்பாலும், இலங்கை தமிழரசு கட்சியில், தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோற்றவரும் செயலாளர் பதவி கேட்டும் நிராகரிக்கப்பட்டவரும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கு எதிரான உள்வீட்டு வழக்குகளின் சூத்திரதாரி என கட்சிக்குள்ளேயே குற்றம்சாட்டப்படுபவரும் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் தனி ஒருவனாக தான் நினைத்ததை செய்துவருபவருமான ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரனையே சுற்றி வருகின்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி கண்ட பின்னர் மட்டும் சுமந்திரன் இவ்வாறு தனி ஒருவனாக செயற்படவில்லை. அதற்கு முன்னரும் அவர் தன்னை கட்சியில் எவரும் கட்டுப்படுத்த முடியாத, கேள்வி கேட்க முடியாத ஒரு சக்தியாக, நபராக நினைத்துக்கொண்டே கட்சியின் கொள்கைக்கும் தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கு மாற்றாகவும், பல கருத்துக்களையும் வெளியிட்டும் செயற்பட்டும் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் விரோதமாகவே செயற்பட்டு வருகின்றார்.

தனது இறுதிக்கட்ட செயற்பாடுகளாக அவர் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளை சந்தித்தபோது அதில் இலங்கை தமிழரசுக்கட்சி பங்கேற்றபோதும் அதில் பங்கேற்காது சுமந்திரன் புறக்கணித்தார். அதேவேளை சர்வதேசநாணய நிதியத்தினருடனான சந்திப்பு தொடர்பில் கலந்துரையாட வருமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் எஸ், சிறிதரன் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் இந்த ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ அழைப்பை 3 கட்சிகளின் தலைவர்களும் புறக்கணித்த நிலையில் இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த சுமந்திரன் மட்டும் அதில் பங்கேற்றார். தனக்கு ஜனாதிபதி தனிப்பட்ட அழைப்பை விடுத்ததாக ஒரு கதையையும் அவர் தனது விசுவாச ஊடகர்கள் மூலம் கசிய விட்டிருந்தார். தனது கட்சி ஜனாதிபதியின் அழைப்பை புறக்கணித்த நிலையில் அக்கட்சியை சேர்ந்த சுமந்திரனால் தனிப்பட்ட அழைப்பு என்ற ரீதியில் எவ்வாறு அதில பங்கேற்க முடியும்? அவ்வாறானால் சுமந்திரன் கட்சிக்கு, அதன் கொள்கைக்கு கட்டுப்பட்டவர் இல்லையா?

அதேபோன்றே கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் வெட்டுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்ட பூசகருள்ளிட்டவர்க களை விடுதலை செய்யக்கோரியும், பொலிஸாரின் அராஜகமான நடவடிக்கைக்கு எதிரானதுமான தமிழ், மலையக கட்சிகளின் போராட்டத்திற்கு பிரதான எதிர்கட்சித்தலைவரான சஜித் பிரேமதாசவே சபைக்கு நடுவே இறங்கி ஆதரவு தெரிவித்து போராடியபோதும் இந்த சுமந்திரன் அந்த நேரம் சபைக்கு வருகை தரவில்லை. ஆனால் அதன் பின்னர் சபைக்குள் வந்து சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நீண்ட நேரம் உரையாற்றினார்.

இது மட்டுமல்ல இலங்கை தமிழரசுக்கட்சிக்கும், அதன் கொள்கைக்கும், தமிழ் மக்களின் நிலைப்பட்டிற்கும் விடுதலைப்புலிகளின் உரிமைப்போராட்டத்திற்கும் எதிராக சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள், செயற்பாடுகள் ஒன்று இரண்டல்ல. வடக்கு,கிழக்கில் தமிழினப்படுகொலை இடம்பெறவில்லை. போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை இராணுவத்தை சர்வதேசம் விசாரணை செய்வதென்றால் விடுதலைப்புலிகளையும் விசாரணை செய்ய வேண்டும். வடக்கில் இடம்பெற்றது தமிழினப்படுகொலை என வடக்கு மாகாண சபையில் அப்போதைய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நிறைவேற்றிய தீர்மானம் தவறு, விடுதலைப் புலிகளையோ அவர்களின் கொள்கைகளையோ நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என சுமந்திரன் எம்.பி. பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

அதுமட்டுமன்றி இலங்கை இராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையில் சுமந்திரன், ஏனைய சிங்கள எம்.பி.க்கள் போன்று பொப்பி மலரை தன்னுடைய ஆடையில் அணிந்தவாறு பாராளுமன்றத்திற்கு சமூகமளித்திருந்தார். அத்துடன் வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்து இடம்பெற்ற முஸ்லிம்களின் கூட்டமொன்றில் பேசிய சுமந்திரன் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியமையானது ஒரு இனச்சுத்திகரிப்பு. இதனை எண்ணி நான் வெட்கித் தலைகுனிகின்றேன். இதற்கு ஒவ்வொரு தமிழரும் பொறுப்பேற்க வேண்டும். இது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் ஒரு பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

ஆனால் அந்தக்கூட்டத்திலோ அல்லது வேறு எந்தவொரு இடத்திலோ கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களினால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள், ஊர்காவல்படை என்ற பெயரில் முஸ்லிம் ஆயுததாரிகளினால் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டமை, தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராக முஸ்லிம்கள் செய்த காட்டிக்கொடுப்புக்கள்,தற்போது கூட கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்புக்கள், அடாவடிகள், கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்திற்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் அவர் வாயே திறக்கவில்லை.

இவற்றுக்கு எல்லாம் உச்சமாக தன்னை 2010 ஆம் ஆண்டு தேசியப்பட்டியல் ஊடாக ஒரு எம்.பி.யாக பாராளுமன்றம் அழைத்துவந்து அரசியல் முகவரி கொடுத்து தனக்கு அடுத்த நிலையில் வைத்து வளர்த்தவரான அப்போதைய இலங்கை தமிழரசுக்கட்சியினதும் தமிழ் தேசியக்கூட்டமைப்பினதும் தலைவரான இரா. சம்பந்தனையே எம்.பி. பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும். சம்பந்தன் ஒரு செயற்பட முடியாத தலைவர். அவரால் திருகோணமலை மாவட்டத்திற்கோ மக்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை எனப்போர்க் கொடி தூக்கி முதுகில் குத்தியவர் இந்த சுமந்திரன்.

சுமந்திரன் 2010 ஆண்டில் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுவிழந்துபோகச் செய்யக்கூடிய பல்வேறு வகையிலான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதுடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராட்டச் செயற்பாட்டையும் நிராகரித்தே வருகின்றார். ஆனால் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், சுமந்திரன் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராட்டச் செயற்பாட்டை நிராகரிப்பதையும் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் அவரது நடவடிக்கைகளையும் அது தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு அல்ல என்றும், அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு எனவும் கூறித் தப்பிக்கின்றனர்.



கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக உறுப்பினர் எவரும் செயற்படும்போது அதற்குரிய ஒழுங்கு நடவடிக்கையெடுக்கப்பட்டு அதன் விளைவுகளை அந்த உறுப்பினர் எதிர் கொள்ள வேண்டுமே தவிர, அவ்வாறு செய்யாது, கட்சிக்கும் அதற்கும் தொடர்பில்லை' என மட்டும் கூறுவதோ அல்லது கண்டனமும் கவலையும் தெரிவிப்பதோ வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக மட்டுமே இருக்க முடியும். சுமந்திரனின் இவ்வாறான "தனி ஒருவன்" நடவடிக்கை தொடர்பில் இலங்கை தமிழரசுக்கட்சியினால் எந்தவொரு நடவடிக்கையும் பெரும் தலைவர் இரா. சம்பந்தன் காலத்திலேயே எடுக்க முடியாத நிலையில் இன்று இலங்கை தமிழரசுக்கட்சிக்கு தலைமையே இல்லாத நிலையில் கட்சியினால் என்னதான் செய்ய முடியும்?

எனவே தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவியும் இல்லை. செயலாளர் பதவியும் கேட்டுக் கிடைக்கவில்லை. பினாமிகளை வைத்து வழக்குகள் போட்டும் கட்சி மடங்கவில்லை என்பதனால் கட்சியின் கொள்கைக்கும் தமிழ் மக்களின் நிலைப்பாட்டுக்கும் முரணாக செயற்பட்டு அதன் மூலம் தன் மீது கட்சி ரீதியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனைப் பயன்படுத்தி எதிர்வரும் புதிய அரசில் தேசியப்பட்டியல் ஊடாகவேணும் அமைச்சுப்பதவி பெற்றுக்கொள்ளும் திட்டத்தின் வெளிப்பாடுகளே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளை சந்தித்தபோது அதில் இலங்கை தமிழரசுக்கட்சி பங்கேற்றபோதும் அதில் பங்கேற்காது சுமந்திரன் புறக்கணித்தமையும் சர்வதேச நாணய நிதியத்தினருடனான சந்திப்பு தொடர்பில் கலந்துரையாட வருமாறு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தலைவருக்கு ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அழைப்பை கட்சியும் தலைவரும் புறக்கணித்த நிலையில் இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த சுமந்திரன் மட்டும் அதில் பங்கேற்மையும் என்ற எதிர்வு கூறல்களையும் இல்லையென ஒரேயடியாக மறுத்துவிட முடியாது.

## "கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தமிழ் இலக்கியவாதிகளோடு மாத்திரமல்ல பிறமொழி சார்ந்த இலக்கியவாதிகளோடு நட்புறவு கொண்டவராக விளங்கினார்"

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

கவிநாயகரது புதல்வி வாணி ருத்திரா மற்றும் அவரது பேரன் மற்றும் பேத்தி ஆகியோரும் தங்கள் "தாத்தா" பற்றிய உரையில் கவிநாயகர் அவர்களது கல்வி மற்றும் கலை இலக்கியம் மற்றும் ஆங்கில இலக்கியம் தொடர்பாக தங்களுக்கு எந்தளவிற்கு அறிவூட்டியவர் என்பதை விபரமாக எடுத்துரைத்தார்கள். அனைத்து உரையாளர்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது அங்கு மண்டபத்தில் அமர்ந்திருந்த அனைவரும் அமைதியாக செவிமடுத்து கவிநாயகர் அவர்களுக்கு மரியாதை செலுத்தினார்கள்.

எம்மை விட்டு பிரிந்து 17-03-2024 இறுதியாத்திரைக்கு தயாராகியிருந்த கவிநாயகரின் தகனக்கிரியைகள் மார்க்கம் நகரில் அமைந்துள்ள செப்பல் ரிட்ஜ் கிரியைகள் நடைபெறும் மண்டபத்தில் 11.00 மணிக்குப் பின்னர் நடைபெற்றன. நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு கலந்து கொண்டு கவிநாயகருக்கு தமது அஞ்சலியை செலுத்தினர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அடுத்தவர்களுக்கு வழிவிடும் தலைமைத்துவப் பண்பு எமது அரசியல் தலைவர்களிடம் இல்லை

## பசுமை அமைதி விருதுகள் விழாவில் ஐங்கரநேசன் ஆதங்கம்





சிறந்த தலைமைத்துவப் பண்பின் வெளிப்பாடு தொடர்ச்சியாகத் தலைமைப் பதவிகளில் அமர்வது அல்ல. உரிய நேரத்தில் தலைமை வகிபாகத்தைப் பொருத்தமான இன்னொருவரிடம் கையளிப்பதுதான் தலைமைத்துவப் பண்புகளில் மிகவும் உயர்வானது. மற்றையவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கும் உயரிய இந்தத் தலைமைத்துவப் பண்பு மாணவர்களிடம் உள்ளது. ஆனால் அத்தியாவசியமான இந்தப் பண்பு இன்றைய எமது அரசியல் தலைவர்களிடம் அறவே இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா கடந்த ஞாயிறு (17.03.2024) யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது இவ்விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தத் தீர்க்கதரிசனமும் ஆளுமையும் கொண்ட, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தேசியத் தலைமை இன்று இல்லை. சகல துறைகளுமே தகுந்த தலைமைத்துவங்கள் இன்றித் தள்ளாடுகின்றன. பல்லுப்போய் சொல்லுப்போனாலும் தானே இன்றும் சிறந்த பாட்டுக்காரன் என்பது போலத் தள்ளாத வயதிலும் தலைமைக்கதிரையில் நிரந்திரமாக அமரவே எமது தலைவர்கள் ஆசைப்படுகின்றார்கள். அந்தக் கதிரையை எட்டுவதற்குப் போட்டா போட்டிகள் இடம் பெறுகின்றன. இந்தத் தலைமைத்துவச் சீரழிவே மேலிருந்து கீழாகச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் இன்று நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணமாக உள்ளது.

மாணவ சமூகம் குறித்துப் போதைப்பொருள் பாவனை உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனாலும், இன்றைய மாணவர்களிடமிருந்துதான் நாளைய எமது தலைவர்கள் உருவாக வேண்டும். அந்த நம்பிக்கை இன்னும் பட்டுப்போகவில்லை. பசுமை இயக்கத்தின் சூழல் பொது அறிவுப் பரீட்சையில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பதக்கங்களை வென்ற தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவன் அபிசாய்ராம் இம்முறை பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை. இரண்டு தடவைகள் விருதுகளைப் பெற்றிருப்பதால் அந்த விருது இனி இன்னொருவருக்குக் கிடைக்க வேண்டும் என்பதாலேயே தான் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இம்முறையும் தங்கப்பதக்கத்தை வென்றிருக்கக்கூடிய ஒரு மாணவன் அதனை இன்னொருவர் பெற்றுக்கொள்ளட்டும் என்று விண்ணப்பிக்காது இருந்தமை சாதாரணமான ஒரு விடயம் அல்ல. இது எமது தலைவர்களிடம் காணக்கிடைக்காத, அடுத்தவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கும் மிக உயர்வான தலைமைத்துவப்பண்பு. இவர் போன்ற மாணவர்கள் எதிர்காலம் குறித்த எம் நம்பிக்கையின் விதைகளாக ஒவ்வொரு கல்லூரிகளிலும் இருக்கிறார்கள். இவ்விதைகள் கருகிவிடாது முளைத்து விருட்சங்களாக வேண்டும். அதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களினதும் ஆசிரியர் சமூகத்தினதும் பெரும் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தவத்திரு.முருகேசு சுவாமிகளின் 27ம் குருபூசை!





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் முருகேசு சுவாமிகளின் 27வது குருபூசை 18-03-2024 திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலமையில் இடம் பெற்ற குருபூசை நிகழ்வில் முதல் நிகழ்வாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் விசேட பூசை வழிபாட்டுகள் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமி அவர்களின் நினைவு பேருரையுடன் கூடிய அறுபத்து மூவர் குருபூசையுடன் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், முருகேசு சுவாமிகளின் பக்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யா/வட்டு இந்துக் கல்லூரியில் Dr. சரண்யா ஜெயக்குமாரின் மாணவர்களை ஊக்கப்படுத்தும் பேச்சு



இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கு வருகை தந்திருந்த முனைவர் Dr. சரண்யா ஜெயக்குமார் அவர்களின் கருத்தரங்கு பாடசாலை அதிபர் தலைமையில் யா/வட்டு இந்துக் கல்லூரியில் 14.03.2024 அன்று சோமசுந்தரப்புலவர் அரங்கில் இடம்பெற்றது.

"ஊழல் அற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்" எனும் தலைப்பில் கருத்தரங்கை நடாத்தினார். "தீதும் நன்றும் பிறர் தர வாரா". அதாவது ஒருவர் நல்லாய் வருவதும் கெட்டுப்போவதும் அவர் அவரைச் சார்ந்தது. ஒரு மனிதனின் பண்பு நேர்மையும் பிறருக்கு தீங்கு செய்யாமல் இருப்பதும் ஆகும். மாணவர்கள் தமது கடமைகளை சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்களது எதிர்காலம் வெற்றிகரமாக அமைய வேண்டுமெனில் அதற்கு கல்வி மிகவும் அவசியம் ஆகும். யாரையும் முன்மாதிரியாகக் கொள்ளாமல் மாணவர்கள் தமது இயல்பிற்கு ஏற்ப முன்னேற வேண்டும். வறுமை என்பது கல்விற்கு தடையல்ல. மாணவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாடசாலைக் கல்வியை சரியான முறையில் கற்றால் அவர்களது எதிர்காலம் நல்ல நிலையை அடையும் எனவும் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

தொலைபேசிப் பாவனையினாலும் போதைப்பொருள் பாவனையினாலும் மாணவர்களது ஒழுக்கமும் கல்வியும் பாதிக்கப்படுகின்றது. அதற்கு மாணவர்கள் அடிமையாகக் கூடாது. இது மாணவர்களது மூளையைப் பாதிக்கின்றது. தொலைபேசி விளையாட்டுக்களால் மாணவர்களது வன்முறை தூண்டப்பட்டு சமூக சீர்கேடுகள் ஏற்படுகின்றது. மாணவர்கள் அவற்றைத் தவிர்க்க வேண்டும் என தமது கருத்துக்களை முன்வைத்து மாணவர்கள் எல்லோரது மனங்களிலும் பெரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்தினார். மாணவர்களது உள ஆரோக்கியத்திற்கு இவரது கருத்தரங்கு மிகவும் பிரயோசனமாக அமைந்தது.

இந்த உன்னதமான கருத்தரங்கை ஏற்படுத்தித் தந்த ரட்ணம் பவுண்டேசன் அமைப்பினருக்கு நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.







# மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் சம்பள அதிகரிப்பு கோரி ஆர்ப்பாட்டம்



**(கனகராசா சரவணன்)**

கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளப் பிரச்சினை மற்றும் ஊழியர்களுக்கு நீண்ட நாட்களாக தீர்க்கப்படாதுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு கோரி செவ்வாய்க்கிழமை (19) மட்டக்களப்பு அரசடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலைய முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு இணங்க நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கம் இணைந்து மட்டக்களப்பில் வெளிவாரி கற்கைகள் நிலைய முன்பாக நூற்றுக்கு மேற்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று காலை ஒன்றினைந்தனர்.

இதன் போது 2016ம் ஆண்டைய சம்பள சீர்திருத்தத்திற்கு அமைவாக பல்கலைக்கழக ஊழியர்களுக்கு தருவதாக அரசினால் வாக்குறுதியளிக்கப்பட்டு இன்றுவரை வழங்கப்படாதுள்ள 15 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு,

மாதாந்த இடர் கொடுப்பனவை அதிகரி, பல்கலைக்கழக சேமலாப நிதியை வேறு தேவைகளுக்கு அரசாங்கம் பயன்படுத்தாதே, யாருடைய படையிது பல்கலையின் படையிது, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய், பல்கலைக்கழகங்களில் காணப்படும் நீண்டகாலமாக காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பு, மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையில் கைவைக்காதே,

அரசே ஏற்றுக் கொள்ளப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு போன்ற பல்வேறு வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஸங்கள் எழுப்புயவாறு ஆர்பாட்டத்தில் சுமார் ஒருமணித்தியாலம் ஈடுபட்டபின்னர் ஆர்பாட்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



இதேவேளை ஒவ்வொரு வாரமும் தீர்வு கிடைக்கும் வரை இப் போராட்டம் இடம்பெறும் என போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.




# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம். ஏனென்றால் **Highmark** வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது **Highmark** இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

# $50,000 வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.

# TheHighmark.ca

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING


Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.

# முதியோர் வரி மீளளிப்ப
## APPLY FOR TAX CREDIT NOW!



ஒன்ராறியோவில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய முதியோர்களை வீட்டில் வைத்து பராமரிக்க மாகாண அரசு TAX மூலம் நிதி உதவி வழங்குகிறது.
வருமான வரி செய்யும் போது தங்களது வீடுகளில் வாழும் முதியோர்களின் மருத்துவ செலவுகள் மீளளிப்பு செய்யப்படும்.

உதாரணமாக:

- முதியோர்களின் வசதிக்கேற்ப வீடு திருத்த வேலைகள் மேற்கொண்டு மேம்படுத்த (25% of up to maximum $10,000)
- மற்றும் பல், பார்வை மற்றும் செவிப்புலன் பராமரிப்பு
- உதாரணமாக: கண்ணாடிகள், பற்கள், கேட்கும் கருவிகள்,நடை பயிற்சி
- உபகரணங்கள் போன்றவற்றை வாங்க உதவுதல்.

For more information visit this link:
https://www.ontario.ca/page/ontario-seniors-care-home-tax-credit#section-0



Ontario
Logan Kanapathi, MPP
Markham- Thornhill

Contact Information
: (905)-305-1935
: logan.kanapthico@pc.ola.org

# குழந்தைப்பராமரிப்பு வரி மீளளிப்பு
## APPLY FOR TAX CREDIT NOW!



ஒன்ராறியோ அரசு, வரி செய்யும் பொழுது குழந்தை பராமரிப்பு செலவு வரிக் கடன் மூலம் மீளளிப்பு செய்யப்படுகிறது.
இது குடும்ப வருமானத்தை அதிகரிக்கிறது மற்றும், குழந்தை பராமரிப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்கி, அவர்களுக்கு. மிகவும் பொருத்தமான தேர்வாக அமைகிறது.

உதாரணமாக:

குழந்தை பராமரிப்பு சேவைகளை வழங்கும் தொடக்க பாடசாலைகள் (nursery),குழந்தை பராமரிப்பு மையங்கள் தங்குமிட பாடசாலைகள், இரவு நேர விளையாட்டு பாடசாலைகள் போன்ற குழந்தைகளின் சேவைகளை கொண்ட அனைவருக்கும் இந்த வரி மீளளிப்பு வழங்கப்படுகிறது

For more information visit this link:
https://www.ontario.ca/page/ontario-child-care-tax-credit



Ontario
Logan Kanapathi, MPP
Markham- Thornhill

Contact Information
: (905)-305-1935
: logan.kanapthico@pc.ola.org

## "எமக்காய் ஸ்காபுறோவில் அமையப்போகின்ற தமிழ் சமூக மையம் கட்டடத் தொகுதியை பூர்த்தி செய்ய வேண்டிய தார்மீகக் கடமை எம் அனைவருக்கும் உண்டு என்பதை உணரவேண்டும்"



(முன் பக்கத் தொடர்ச்சி)



எமது தமிழ்ச் சமூகத்தின் தேவைக்காக வேறு ஒரு சமூகத்திடமிருந்து எமக்கு நிதி கிடைக்கும் என்றும் நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே எமக்குத் தேவையான 30 மில்லியன் டாலர்களை கனடா வாழ் தமிழ் மக்களிடமிருந்து சேகரிக்கும் வகையில் எமது நிதி சேகரிப்புக்குழு திட்டங்களை வகுத்துள்ளது. அதற்கு எமது ஒட்டு மொத்த சமூகமும் முன்வந்து ஆதரவைத் தரவேண்டும்"

இவ்வாறு "தமிழ்ச் சமூக மையம்" கட்டடத் தொகுதி நிதி சேகரிப்பு குழுவின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் "கனடா உதயன்" பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று காலை தொடக்கம் பொது மக்களைச் சந்தித்து உரையாடும் வகையில் ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் "தமிழ்ச் சமூக மையம்" நிர்வாகக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தில் எவ்வாறு "தமிழ்ச் சமூக மையம்" என்ற சிந்தனை உருவாகியது. பின்னர் எத்தனை கட்டங்களாக அதற்குரிய காணியை ரொறன்ரோ நகரசபை நீண்ட கால குத்தகைக்கு வழங்கியது. பின்னர் எவ்வாறு மூன்று அரசாங்கங்களிடமிருந்து ஆரம்ப நிதியைப் பெற்றுக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பெற்றன போன்ற விபரங்கள் சபையோருக்கு எடுத்துரைக்கப்பட்டன.

தொடர்ந்து சபையோரிடமிருந்தும் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மேற்படி கூட்டம் பயனுள்ள வகையில் அமைந்தது என்றே கூறலாம்.

அதனைத் தொடர்ந்து "தமிழ்ச் சமூக மையம்" கட்டடத் தொகுதி நிதி சேகரிப்பு குழுவின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தங்கள் நிதி சேகரிப்புக் குழுவின் திட்டங்கள் தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

" எமது கனடா வாழ் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு கொடையாகவே இந்த "தமிழ்ச் சமூக மையம்" அமையப் போகின்றது. அதனை பூரணமாக கட்டி முடிக்கத் தேவையான 30 மில்லியன் டாலர்களை எமது மக்கள் மத்தியி-லிருந்து தான் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் எமது சமூகத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் கொடையாளர்களிடமிருந்து பத்து மில்லியன் டாலர்களை சேகரிக்கும் முயற்சிகளில் இரவு பகலாக இயங்கிவருகின்றோம். அதை விட அடுத்த 10 மில்லியன் டாலர்களை எமது சமூக மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எமது மக்களில் 10000 பேரிடமிருந்து தலா ஆயிரம் டாலர்கள் சேகரிப்பது என்று நாம் தீர்மானித்துள்ளோம். எனவே இந்த திட்டத்திற்கும் எமது மக்கள் தங்கள் கடமை என எண்ணி தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.

நாம் தொடர்ந்து ஏனைய இனங்களால் நடத்தப்பெறும் ஆர்மேனியம் மண்டபம் சீனக் கலாச்சார மண்டபம் போன்ற மண்டபங்களில் நடத்தவது போன்று எமது தமிழ்ச் சமூக மையத்தில் அமையவுள்ள நவீன மண்டபத்திலும் எமது விழாக்களை நாம் நடத்த வேண்டும். எமது முதியவர்கள் ஒன்று கூடி தங்கள் முதுமைக்கால கவலைகளிலிருந்து விடுதலை பெறும் வகையில் அவர்களுக்கான திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்"

இவ்வாறு தெரிவித்தார் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள்

## Join OxiClean™ in Celebrating Holi

### "ஹோலி" பண்டிகையைக் கொண்டாடுவதில் இவ்வருடம் OxiClean™ உடன் இணைந்து கொள்ளுங்கள்




**HOLI KE SAATH BHI, HOLI KE BAAD BHI.**
**This Holi, win a year's supply of stain remover.**

Brightly coloured dyes, music, dancing, and cheers of 'Holi hai' are just some of the fond memories we share around the colourful festival of Holi!

This year, as you prepare to immerse yourself in the vibrant colours of Holi, we invite you to join us in the celebrations by showcasing your most dazzling festive outfit and sharing how you revel in the spirit of the festival. Whether you're splashing friends and family with colours, indulging in delicious sweets…we want to hear all about it, especially if it's playing with colours! Share your best & brightest Holi moments using #HoliWithOxiClean on Instagram and you could have a chance to win a year's supply of OxiClean™ Max-Force Laundry Stain Remover Spray and OxiClean™ Versatile Stain Remover Powder! For contest details, visit us @OxiCleanCanada on Instagram.

Nobody likes stained clothes and there are times when you'd rather enjoy the moment than worry about cleaning them. Likewise, when you celebrate Holi this year, enjoy the colour of every moment without worrying about your clothes getting stained. OxiClean's™ water-activated formula unleashes bubbling oxygen power for safe, effective cleaning – all while being gentle on your clothes. These incredible chlorine-free, colour-safe stain fighters use the power of oxygen to get tough stains out of your laundry – while also boosting your laundry water's pH to improve your detergent's cleaning ability.

To use, simply add OxiClean™ MaxForce Laundry Stain Remover Spray and OxiClean™ Versatile Stain Remover Powder to your laundry routine and combat the toughest and most powerful stains – whether you get them this Holi or during any other special moments.

Remember to elevate your Holi experience and have the chance to win an amazing prize. Share your joy, your colours, and your stories with us using #HoliWithOxiClean, and let's make this festival of colours even more memorable together!

To learn more about the contest, check the details on @OxiCleanCanada on Instagram. Wishing you a very happy Holi, from OxiClean™.




எம் கனேடிய கலைஞர்களோடு தென்னிந்திய மற்றும் தாயக
கலைஞர்கள் இணைந்து தாய் தேசத்தில் கல்வியால் மேம்பட்ட
ஒரு சமூகத்தை உருவாக்கும் காலப் பணிக்காக நடாத்தும்...
KNN FINANCIAL CORPORATION
ஆதரவில்..
27 YEARS
வன்னிச் சங்கத்தின்
வன்னி விழா
இசையும் உதவும் திசையும்
Vanni Vizha -2024
வன்னியின் வீரத்தமிழச்சி
குயிலிச்சி நாச்சியார்
நாட்டிய நாடகம்
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE E, SCARBOROUGH
(KENNEDY AND FINCH)
MARCH -23
SATURDAY
5:30 PM
ரேணுகாதேவி விக்னேஸ்வரன்
வழங்கும்
ஓம் சக்தி நடனம்
பின்னணிப் பாடகர்
ஹரிஹரசுதன்
ஈழத்து பாடகர், இசையமைப்பாளர்
கந்தப்பு ஜெயந்தன்
Shianaaz
GET YOUR TICKET!
தொடர்புகளுக்கு:
416-644-1113
VCAREKIDS.ORG
FB.COM/VCAREKIDS
Ticket க்களை பெற்றுக்கொள்ள:
சிவா: 416-520-1214
சுதன்: 416-558-1917
CHILDREN (5-12) : $ 10
ADULT : $ 30
VIP
VVIP
AVAILABLE
PROFESSIONALISM
RESPONSIVENESS
QUALITY
KNN FINANCIAL CORPORATION
416-494-3334.
www.knnincometax.com
RE/MAX REALTY INC., BROKERAGE
ACE
Experts In The Local Market
EXPERIENCE THE DIFFERENCE
416-270-1111
www.remaxace.com
LKA AUTOREPAIRS
Always behind your wheels
2070 Steeles Ave. E
Brampton, On
L6T 1A7
N.T.Patrick
Cell: 647.267.3212
Ph. 905.451.0758
lka.bramton@gmail.com
MORTGAGE FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
COMMERCIAL
CONSTRUCTION
INDUSTRIAL
NESAN
416-908-5656
Scotiabank
Canada Trust
RFA
REFINANCE
ஒரே தீர்வு
Siva Ratnasingam
New Mortgages & 2nd Mortgages
Dr. ReFinance
Division of ceylingo Financial Group
Call: 416-520-1214
KT Group of Companies LTD.
Integrated Facilities Management
Commercial Cleaning
Security Services
Restoration Services
Employment Services
WWW.PALMYRAHOMES.CA
PALMYRA HOMES
416 • 930 • 9898
Krishna
LIVE
TELECAST
RE/MAX ACE
REALTY INC BROKERAGE
Sri Nadarajasundram
416-276-6666
YOUR LUXURY
CUSTOM HOME BUILDER
"Redefining Luxury Living"
artreum
416 900 6000
info@artreum.ca
www.artreum.ca
நந்தா உணவகம்
416 - NANTHA -1
416 - 626 - 8421
Best Caters in Town
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
(416) 287-2222
www.remaxcommunity.ca
ஈழமுரசு
உதயன்
செந்தாமரை
Anaiai Express
செய்தி.com
சங்கத்தமிழ்

# இந்தியாவிலிருந்து படகை எடுத்துச்செல்ல வந்தவருக்கு சிறை

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் பிடிபட்ட படகின் வழக்கை எதிர்கொள்ள விமானம் மூலம் இலங்கை வந்த தமிழக மீனவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அவர் நீதிமன்ற காவலுக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் இந்திய மீனவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் கடற்பரப்பிற்குள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் எல்லை தாண்டி சட்டவிரோதமாக நுழைந்த சமயம், அதிலிருந்த நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீன்பிடித் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது படகிற்கான விசாரணைக்கு புதன்கிழமை (20) திகதியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு திகதியிடப்பட்ட இரு படகுகளின் வழக்கு விசாரணை இடம்பெற்ற சமயம் படகின் உரிமையாளர்கள் சட்டத்தரணிகள் மூலம் மன்னார் நீதவான் முன்னர் தோன்றினர். வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதோடு அதுவரை படகோட்டியை விளக்கமறியலில் வைக்குமாறும் மன்னார் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதற்கமைய தமிழகம், இராமநாதபுரம் பாம்பனைச் சேர்ந்த படகு உரிமையாளர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பொதுவாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் பிடிபடும் போது, அவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையினர், படகுகளை பறிமுதல் செய்வதே வழக்கமாக இருந்துள்ளது. எனினும் படகின் உரிமையாளர் உரிய முறையில் அதை மீட்டுச்செல்ல வந்த நிலையில், இப்போது நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டார்.

தமது மீனவர் ஒருவர் படகை மீட்கச் சென்ற போது இலங்கையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது தமிழக மீனவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகால்கள் தெரிவிக்கின்றன. உடனடியாக அந்த மீனவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள தமிழக மீனவர்கள், இது தமிழக மற்றும் இந்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்று கூறியுள்ளனர்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பீடி இலைகள் பறிமுதல் செய்யப்பட்டன

- நடராசா லோகதயாளன்

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் தமிழகத்தின் ஏர்வாடிக் கடற்கரைக்கு எடுத்து வரப்பட்ட 2 ஆயிரம் கிலோ பீடி இலை தமிழக பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் படகில் ஏற்றுவதறகாக புதன்கிழமை இரவு 9 மணியளவில் ஒரு லொறியில் கடற்கரைக்கு எடுத்து வந்த சமயம் பொலிசாரைக் கண்டதும் கடத்தல்காரர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இதன்போது லொறியை பரிசோதனை செய்த தமிழக பொலிசார் அதில் இருந்து ஒவ்வொன்றும் 30 கிலோ எடையுடைய 70 பொதிகளை மீட்டுள்ளனர்.

இதனால் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த ஓர் கடத்தல் நடவடிக்கை முறியடிக்கப்பட்டுள்ளது என்று தமிழக பொலிசார் கூறுகின்றனர். தொடர்ச்சியாக தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தப்படுவதும், சில சமயங்களில் அவை பிடிபடுவதும் வழமையாகவுள்ளது.

அவ்வகையில் இலங்கையில் யார் அப்படி கடத்திவரப்படும் இலைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பது விசாரிக்கப்படுகிறது என்று இலங்கை பொலிசார் கூறுகின்றனர். இலங்கை இந்திய கடற்பரப்பு கடத்தலுக்கான ஒரு முக்கிய கேந்திரமாக மாறி வருவதை தாங்கள் அவதானித்துள்ளதாகவும், அதை தடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிசார் கூறினாலும், கடத்தல் என்னவோ தொடர்ந்து நடைபெறுகிறது.

# அவுஸ்த்திரேலிய தேசியப் பல்கலைக்கழகத்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம், சட்டவிரோத பயணத்தை தடுப்பது தொடர்பில் ஆலோசனை

- நடராசா லோகதயாளன்

அவுஸ்த்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, அவுஸ்த்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டது.

இலங்கையில் அவுஸ்த்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, ஆஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ள கடல்சார் வளம் மற்றும் கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுத் திறன் மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கும், அவுஸ்த்திரேலிய அரசின் உதவிகள் வழங்கப்படக்கூடிய இடங்களை அடையாளங்காணும் வகையிலும், கொழும்பிலுள்ள அவுஸ்த்திரேலிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் மற்றும பொருளாதாரத்துக்கான முதல் செயலாளர் கலாநிதி போல் செக்கோலா தலைமையிலான குழுவி-னரே கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையிலான குழுவி-னரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது அவுஸ்த்திரேலிய அதிகாரிகள் குழுவில், தென் ஆசிய மற்றும் இந்து சமுத்திரக் கடற் பிராந்தியப் பாதுகாப்புசார் விற்பன்னரும், அவுஸ்த்திரேலிய தேசியப் பல்கலைக்கழக தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளருமான கலாநிதி டேவிற் பிரேஸ்டர், ரோயல் அவுஸ்த்திரேலிய கடற்படையின் ஓய்வு பெற்ற அதி-காரியும், புதுதில்லியில் கடமையாற்றும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோச-கருமான கப்டன் சைமன் பேட்மன், கொழும்பிலுள்ள அவுஸ்த்திரேலிய உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அமெண்டா ஜோண்சன் மற்றும் அவுஸ்த்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அத்தியட்சகர் வனேசா ர்.்ப் ஆகியார் அடங்கியிருந்தனர்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் மற்றும் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி கே. கரு-ணாநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் போது தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசின் நலனோம்புத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சட்ட விரோத புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக மட்டச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சட்டவிரோதமான வகையில் தமது நாட்டிற்குள் நுழைவதற்கு எதிராக அவுஸ்த்திரேலிய அரசு இலங்கை உட்பட பல நாடுகளில் தீவிர பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இலங்கையிலும் கூட வானொலி, தொலைக்காட்சி மூலமும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதற்கு அப்பால், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பெரியளவில் விளம்பரப் பதாதைகளும் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறான விளம்பரங்களை வைப்பதற்கான கட்டணம் தொடர்பில் கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்திற்கும் யாழ்ப்பாண மாநகராட்சிக்கும் இடையே முறுகள் நிலையும் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஸ்காபுறோவில் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள 'திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்' நூல் வெளியீட்டு விழா

எதிர்வரும் 24-03-2024 ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ள "திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளும் வண்ணம் நூல் ஆசிரியர் மொன்றியால் வாழ் கவிஞரும் எழுத்தாளருமான ஆ. சிறீஸ்கந்தராஜா (ஆறு சிறீகாந்தன்) அவர்கள் ரொறன்ரோ வாழ் கலை இலக்கிய நண்பர்கள் மற்றும் வாசகர்களை அழைக்கின்றார்.

அன்றைய தினம் பிற்பகல் 1.30 தொடக்கம் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழா எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகை மற்றும் ஊடகதுறை சார்ந்த நண்பர்கள் சிறப்புரைகளை ஆற்றவுள்ளார்கள்.

இந்த நூலில் அடங்கியுள்ள விடயங்கள் தமிழ்த் திரைப்படப் பாடல்களை எழுதிய பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர்கள் ஆகியோரின் அபாரத் திறமையினால் எமக்கு கிடைத்த பொக்கிசங்களாக விளங்கும் பாடல்களின் சிறப்புக்களை எடுத்தியம்புகின்றன.

அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.




**Invitation to Book Releasing Ceremony**
**Of Aru. Sreekanthan's**
**"Cine Literature on Cultural Ethics"**
**(Tamizh)**
**on**
**24th March 2024 (Sunday) at 1:30 PM**



**Venue: Council Chamber,**
**Scarborough Civic Centre**
**150, Borough Dr.**
**Toronto, ON M1P 4N7.**

***Scarborough Civic Centre access via entrance off of Albert Campbell Square.**

**நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்**

**அன்புடையீர்!**
எதிர்வரும் பங்குனி மாதம்
**24ம் திகதி– ஞாயிற்றுக்கிழமை (24-3-2024)**
**பி.ப. 1:30 மணி** அளவில்
**ஸ்காபரோ – சமூக மையத்தின்**
**Council Chambers அரங்கத்தில்**
நடை பெற இருக்கும்
**"திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்"**
நூல் வெளியீட்டு விழாவில்,
குடும்ப, இலக்கிய நண்பர்கள், நலன் விரும்பிகள்
மத்தியில் உங்களை காண அன்புடன் அழைக்கின்றோம்.
- ஆ. சிறீஸ்கந்தராஜா




*Dear ones ! We wish to see your presence among family friends, literary enthusiasts and well-wishers,*
***on 24th March 2024 at 1:30 PM. At Scarborough Civic Centre in Council Chamber***
*On the occasion of*
***"Cine Literature on Cultural Ethics" (Tamizh)***
*Book Releasing Ceremony*
*- A. Sriskandarajah.*

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸின் ஆறு நூல்களின் அறிமுக விழா அவுஸ்த்திரேலியாவில் நடைபெற்றது

கனடிய செய்திகள் Canadian News



கனடா வாழ் படைப்பாளியும் பொறியியலாளரும். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவருமான அகணி சுரேஸ் அவர்களின் ஆறு நூல்களின் அறிமுக விழா இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை அவுஸ்திரேலியா சிட்னி மாநகரில் தூங்கபி என்ற இடத்தில் அமைந்துள்ள சென்ற் அந்தனி படுவா கத்தோலிக்க தேவாலய மண்டபத்தில் விமர்சையாக நடைபெற்றது.

மேற்படி விழா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்- நியூ சவுத் வேல்ஸ் ஆதரவில் பொறியியலாளர் நடராஜா லோகேஸ்வரன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அகணி சுரேசின் "இன்னும் இருக்கிறது இனிய வாழ்வு (நாவல்)", "கதைச்சாரல்", "அன்புடைமை", "குவலயம் ஆளும் குடிசார் பொறியியல்", "வெகுளாமை", "கட்டுரைச் சாரல்" ஆகிய நூல்களும் அகணி சுரேசின் பாடல் வரிகளிலும், தயாரிப்பிலும், இசையமைப்பாளர் C. சுதர்சன் அவர்களிலும் உருவான "தமிழழகே", "நீ நான் மனிதன்", "தமிழைப் பேசிடும் பெருமக்கள்", "தாய்மொழித் தமிழே", "உன்னை என்றும் நினைவில் கண்டேன்", "டும் டும்" ஆகிய காணொளிப் பாடல்களும், அகணி சுரேசின் வரிகளிலும், செல்வன் தயாரிப்பிலும், ஊ.சுதர்சன் இசையிலும் , கோகுலன் குரலிலும் உருவான "ஐங்கரத்தில் ஐம்பூதம்" என்ற பாடலும் அறிமுகம் செய்யப்பட்டன. நூல் வெளியீட்டு நிகழ்வினை தமிழாழி, கிருஷ்ணா தொலைக்காட்சி ஆகியன நேரலையில் கொண்டு வந்தன. மெய்நிகர் வழியிலும் பல நாடுகளிலிருந்தும் பார்வையாளர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். தனித்துவம் மிக்க நிகழ்வு என்ற ரீதியில் ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் நிகழ்வினை மெய்நிகர் வழியாகக் கண்காணித்து சாதனைக்குரிய நிகழ்வாக பதிவும் செய்யப்பட்டது.

மங்கல விளக்கேற்றலுடன் தொடங்கப்பட்ட இந்த நிகழ்வினை பொறியியலாளர், வானொலி நிகழ்ச்சி அறிவிப்பாளர் சஞ்சயன் செவ்வனே தொகுத்து வழங்கினார். செய்தார். தமிழ்த்தாய் வாழ்த்து, அவுஸ்திரேலியப் பண் ஆகியவற்றை செல்வி அபினா மங்கலேஸ்வரன், செல்வி சிவசினி சிவதாசன் ஆகியோர் வழங்கினார்கள். படைப்பாளி அகணி சுரேஸ் பற்றிய அறிமுகவுரையை கட்டிடக் கலைஞர் செல்வி சஹானா மோகனராஜா அவர்கள் வழங்கினார். நாடகக்கலைஞர், பொறியியலாளர் நடராஜா கருணாகரன் அவர்கள் மற்றும் எழுத்தாளர் ஆசி கந்தராசா அவர்களும் முன்னோடி எழுத்தாளர் மாத்தளை சோமு அவர்களும் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

தலைமையுரையினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - நியூ சவுத் வேல்ஸ் இன் தலைவர் பொறியியலாளர் நடராஜா லோகேஸ்வரன் வழங்கினார். நூல்கள் பற்றிய நயவுரைகளை திருமதி. சௌந்தரி கணேசன், திரு. ஜனார்த்தனன் குமரகுருபரன், கலாநிதி கௌரிபாலன், திரு. பாலசிங்கம் பிரபாகரன், திருமதி. இந்துமதி ஸ்ரீனிவாசன், திரு. ஜெகேந்திரா அவினாசிநாதன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். வெளியீட்டுரையினை பேராசிரியர் பிரவீன் மகேந்திரராஜா அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்வு பற்றிய மதிப்பீட்டுரையை திரு. வசந்தராஜா அவர்கள் வழங்கினார். நூலாசிரியர் அகணி சுரேஸ் அவர்களின் ஏற்புரையுடன் அறிமுகவிழா இனிதே நிறைவுற்றது. இந்த நிகழ்வில் பங்குபற்றிய இலக்கிய உறவுகள், அகணி சுரேசின் பல்கலைக்கழக நண்பர்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள், கல்லூரி நண்பர்கள், உறவினர்கள் ஆவலுடன் நூல்களை வாங்கிச் சென்றதைக் காண முடிந்தது. இந்த நூல்கள்,பாடல்கள் நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்களால் குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் தொடங்கி, நிறைவும் செய்யப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடாவிலிருந்து சென்று மேற்படி அறிமுகவிழா வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கி மண்டபம் நிறைந்த விழாவாகக் கண்டு களித்து நாடு திரும்பிய எமது எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்களுக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் இயக்குனர் சபை பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.


















# ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதி மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் நடத்திய இளையோருக்கான தொழில் சந்தை நிகழ்வு







கடந்த 16-03-2024 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ ரூஜ்பார்க் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் நடத்திய இளையோருக்கான தொழில் சந்தை நிகழ்வு ஸ்காபுறோவில் உள்ள மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. ஏராளமான இளையவர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் அங்கு தங்களுக்கு கிடைக்கக் கூடிய முதலாவது வேலையை பெற்றுக் கொள்ளும் விருப்பத்துடன் அங்கு கலந்து கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொண்டனர்.






முக்கிய கனடிய இராணுவ தொழில் வழங்கும் பிரிவு மற்றும் ரொறன்ரோ பொலிஸ் அதிகார சபை உட்பட பல பொது நிறுவனங்களும் பொது அமைப்புக்களும் அங்கு சாவடிகளை அமைத்து தொழில் தேடிச் சென்றவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கின.

மாகாணப் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாணத்தில் போக்குவரத்து அமைச்சின் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் அவர்களும் அங்கு சமூகமளித்து அனைவரோடு உரையாடி மகிழ்ந்தார்.

விஜேய் தணிகாசலம் அவர்களின் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள vijay.thanigasalam@pc.ola.org or by phone at (416) 283-8448. ஆகியவற்றை பயன்படுத்தவும்






இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# பஞ்ச ஈச்சரங்களின் ஒன்றான கீரிமலை நகுலேச்சர ஆலய ஆதீன கர்த்தா இறையடி சேர்ந்தார்





பஞ்ச ஈச்சரங்களின் ஒன்றான கீரிமலை நகுலேச்சர ஆலய ஆதீன கர்த்தா வணக்கத்திற்குரிய ந. குமாரசவாமிக் குருக்கள் 20-03-2024 அன்று அதிகாலை தனது 71வது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

குறிப்பாக ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாரான மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் மகனான இவர் கடந்த வருடம் தந்தையின் மறைவின் பின் ஆதீனகர்த்தாவாக இருந்து ஆலயத்தை வழிநடாத்தி வந்தார்.

அண்மைக் காலமாக உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சைபெற்றுவந்த நிலையில் இன்று அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

# வெடுக்குநாறி மலை விவகாரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மூதூரில் கவனயீர்ப்பு போராட்டம்!

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற மத அனுஷ்டானங்களின் போதான சம்பவம் கண்டிக்கத்தக்கது, இதற்காக நீதி தேவை எனவும், கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்யக் கோரி வலியுறுத்தியுமான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று (18) மூதூரில் இடம் பெற்றது.

குறித்த கவனயீர்ப்பை மக்கள் மறுமலர்ச்சி மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

திருகோணமலை - மூதூர் பேருந்து நிலைய வீதியில் இருந்து பிரதேச



செயலகம் வரை சென்று, பிரதேச செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டது.

இதில் ஒன்றிணைந்த சிவில் சமூகம், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இலங்கை அரசே எமது வழிபாட்டு உரிமையை உறுதி செய் போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் இதன் போது கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.




அதன் அமைப்பாளர் பாஸ்கரன் பிரபாகரன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்துரைத்தார்,

கடந்த எட்டாம் திகதி வெடுக்குநாறியில் நீதிக்கும் சட்டத்துக்கும் புறம்பான கைதை கண்டிக்கிறோம் தொல்பொருள் எனும் போர்வையில் இவ்வாறான தொல்லை கொடுக்கப்படுகிறது. தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்க நினைக்கின்றனர் ஜனநாயக நாட்டில் சுதந்திரமாக வாழ வழிவிட வேண்டும்.

தொல்பொருள் என்ற போர்வையில் ஈடுபடாது நீதியான விசாரணை தேவை கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்து தாருங்கள் எனவும் கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

# கிளிநொச்சியில் குடும்ப பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 32 மாணவர்கள் கல்வி இடை விலகல்

## அதிக அக்கறை செலுத்துமாறு பதில் அரசாங்க அதிபர் அறிவுறுத்தல்

கிளிநொச்சியில் குடும்ப பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 32 மாணவர்கள் கல்வி இடை விலகியுள்ளதாக புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துமாறு பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளர். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலிலேயே இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முதல் காலாண்டுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது, சிறுவர்களின் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 மாணவர்கள் கல்வி செயற்பாட்டிலிருந்து இடை விலகியதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 29 பேர் மீள் இணைக்கப்பட்டதாகவும் புள்ளிவிபர பட்டியலில் குறிப்பிடப்பட்டது.

மேலும் இருவர் மீள் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 11 மாணவர்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 02 மாணவர்களும் அடையாளம் காணப்பட்டு மீள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாடசாலை இடைவிலகல் மீளிணைப்பு
2024

| பிரதேச செயலகம் | இனங்காணப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | மீளிணைக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| கரைச்சி | 11 | 11 |
| கண்டாவளை | 02 | 02 |
| பூநகரி | 14 | 13 |
| பச்சிலைப்பள்ளி | 05 | 03 |
| | 32 | 29 |

இதேவேளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 05 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு மூவர் கல்விக்காக மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 14 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு 13 பேர் மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

குடும்ப பொருளாதாரம், வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறு மாணவர்களின் கல்வி இடைவிலகவிற்கான அதிக காரணமாக அமைந்துள்ளதாக உத்தியோகத்தர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை ஒழுக்காற்று நடவடிக்கை எனும் பெயரில் 6 மாதங்கள் வரை மாணவர்களை இடை நிறுத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஒழுக்காற்று நடவடிக்கையினால் இடைவிலகல் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் எனவும், அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படின் அவ்விடயம் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

வலயக் கல்வி பணிமனைக்கு அறிவித்தல் வழங்கப்படும் அதே வேளை, பிரதேச செயலகத்துக்கும் அறிவித்தலை வழங்க வேண்டும்.

பாடசாலை கல்வி, பாதுகாப்பு தொடர்பில் தொடர் அதிக கண்காணிப்பு அவசியம் எனவும், பிரதேச செயலகங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கூட்டங்களை நடத்த வேண்டும் எனவும் பதில் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கம் தொடர்பில் பெற்றோருக்கு விழிப்புணர்வையும், ஆலோசனைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவ் தெரிவித்தார்.



# சேந்தாங்குளம் கடலில் இருவர் மூழ்கிய நிலையில் இருவர் சடலமாக மீட்பு!

சேந்தாங்குளம் கடலில் குளிப்பதற்கு வந்த மூவரில் இருவர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்நிலையில் ஒருவரது சடலம் கரையொதுங்கியுள்ளது. மற்றையவரை தேடும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் அவரது சடலமும் மீட்கப்பட்டது.





தங்கன்குளம் செட்டிக்குளம், வவுனியாவைச் சேர்ந்த தேவகருணதாசா



ஜுட் (திருமணம் செய்து இளவாலையில் வசித்து வருகிறார் - வயது 37), மற்றும் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியை சேர்ந்த சிவனேசன் திபிசன் (வயது 21) என்பவர்களே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர். இளவாலையில் திருமணம் முடித்து நிலையில் அங்கு வசித்து வருகிறார். இந்நிலையில் ஆரியகுளம் பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு விருந்தினராக வந்துள்ளார். இந்நிலையில் அந்த விடுதியின் உரிமையாளரும், அங்கு பணி புரியும் இளைஞர் ஒருவரும், குறித்த விருந்தினரும் இன்று மாலை கடலில் குளிப்பதற்கு சென்றனர்.

இந்நிலையில் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில், அவரை காப்பாற்றுவதற்கு மற்றையவர் முயன்றுள்ளார். இந்நிலையில் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் இரருவரது சடலங்களுமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளன.

# நடேஸ்வராக்கல்லூரி – கனடா பழைய மாணவரின் ஒன்றுகூடல்



- குரு அரவிந்தன்

கனடாவில் உள்ள நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் குளிர்கால ஒன்றுகூடல் மார்ச் மாதம் 9 ஆம் திகதி 2201, பிஞ்ச் அவென்யூவில் உள்ள யூலியஸ் இவண்ட் சென்ரரில் மாலை 6 மணியளவில் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்றது.

அகவணக்கத்தைத் தொடர்ந்து, கனடா தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து, கல்லூரிக்கீதம் பாடப்பெற்று, மங்கள விளக்கேற்றும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் சங்கத்தின் காப்பாளர்களான எழுத்தாளர் குரு அரவிந்தன், பி. விக்னேஸ்வரன், கே.எஸ். குணசிங்கம், மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கணக்காளர் மகேந்திரலிங்கம், திருமதி. மகேந்திரலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர். தொடர்ந்து சானுஸா சஞ்சயனின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

அடுத்து சங்கத் தலைவர் மார்க்கண்டு நிர்மலனின் உரை இடம் பெற்றது. "நடேஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சிக்காக முடிந்தளவு சங்கத்தால் உதவிகளைச் செய்து கொண்டிருப்பதாகவும், தற்போது அருகில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டதால் தையிட்டியில் இருக்கும் பிள்ளைகள் கல்லூரி வீதி வழியாகக் கல்லூரிக்கு வருவதற்கு வசதிகள் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் புதிதாக வரும் பிள்ளைகளுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள அங்கத்தவர்கள் உதவி செய்ய முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்தார்."




பாடசாலையின் தற்போதய அபிவிருத்தி நிலைபற்றிப் பழைய மாணவர் மகாலிங்கம் குமாரகுலதேவன் ஒளிப்பட விவரங்கள் மூலம் எடுத்துரைத்தார். இதைத் தொடர்ந்து வைஸ்னவி நந்தேஸ்வரன், மாதங்கி சிவகுமார் ஆகியோரின் நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து பவித்திரன் ஈவராநந்தம், கிருஸ்ணபிள்ளை நீலவண்ணன், சின்னராசா தாசன் ஆகியோரது பாடல்கள் இடம் பெற்றன. தொடர்ந்து விதுஸா கௌரிபால், சாபினா கௌரிபால், மீனுசி கௌரிபால், காஈட்சிப் கௌரிபால் ஆகியோரது குழு நடனம் இடம் பெற்றது. இறுதி நிகழ்வாக கார்ஸா ஜனார்தனனின் நடனம் இடம் பெற்றது.



அடுத்து நடேஸ்வராக்கல்லூரியின் புதிய அதிபர் திரு. பாலகுமார் அவர்களின் ஒளிப்திவு செய்யப்பட்ட உரை காட்சிப்படுத்தப் பட்டது.

இரவு விருந்தைத் தொடர்ந்து கௌரிபால் கோபால், ஜெய்பாலன் கோபால் ஆகியோரது "கர்னன்" பற்றிய நாட்டிய நாடகம் இடம் பெற்றது. மிகச் சிறப்பாக இருவரும் மேடையேற்றிப் பலரின் பாராட்டையும் பெற்றிருந்தனர். நிகழ்ச்சிகளைக் காப்பாளர் முரளிதரன் கொண்டு நடத்தினார். சின்னராஜா தாசனின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே முடிவுற்றது.

# அன்பின் தொனி - 724

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை -** Grace of God

**நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்**

அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடி தியில் நாசமடைவான். நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள் துன்மார்க்கர் ஆளும்போதோ ஜனங்கள் தவிப்பார்கள். ஞானத்தில் பிரியப்படுகிறவன் தன்தகப்பனை மகிழப்பண்ணுகிறான்; வேசிகளோடே தொந்திப்பானவனோ ஆஸ்தியை அழிக்கிறான். நியாயத் தினால் ராஜா தேசத்தை நிலைநிறுத்துகிறான்; பரிதானப்பிரியனோ அதைக் கவிழ்க்கிறான். பிறனை முகஸ்துதி செய்கிறவன், அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான். துஷ்டனுடைய துரோகத்திலே கண்ணியிருக்கிறது; நீதிமானோ பாடி மகிழுகிறான். நீதிமான் ஏழைகளின் நியாயத்தைக் கவனித்தறிகிறான்; துன்மார்க்கனோ அதை அறிய விரும்பான். பரியாசக்காரர் பட்டணத்தில் தீக்கொளுத்திவிடுகிறார்கள்; ஞானிகளோ குரோதத்தை விலக்குகிறார்கள். ஞானி மூடனுடன் வழக்காடுகையில், சினந்தாலும் சிரித்தாலும் அமைதியில்லை. இரத்தப் பிரியர் உத்தமனைப் பகைக்கிறார்கள்; செம்மையானவர்களோ அவனுடைய பிராணனைக் காப்பாற்றுகிறார்கள். மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான். அதிபதியானவன் பொய்களுக்குச் செவிகொடுத் தால், அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள். தரித்திரனும் கொடுமைக்காரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்; அவ்விருவருடைய கண்களுக்கும் கர்த்தர் வெளி ச்சங் கொடுக்கிறார். **- நீதிமொழிகள் 29: 1-13**

**உன் மகனைச் சிட்சைசெய், அவன் உனக்கு ஆறுதல்செய்வான்**

ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைபெற்றிருக்கும். பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத் திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான். துன்மார்க்கர் பெருகினால் பாவமும் பெருகும்; நீதிமான்களோ அவர்கள் விழுவதைக் காண்பார்கள். உன் மகனைச் சிட்சைசெய், அவன் உனக்கு ஆறுதல்செய்வான், உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான். தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்; வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். அடிமையானவன் வார்த்தைகளினாலே அடங்கான்; அவைகளை அவன் அறிந்தாலும் உத்தரவுகொடான். தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம். ஒருவன் தன் அடிமையைச் சிறுபிராயமுதல் இளக்காரமாக வளர்த்தால், முடிவிலே அவன் தன்னைப் புத்திரனாகப் பாராட்டுவான். கோபக்காரன் வழக்கைக் கொளுவுகிறான்; மூர்க்கன் பெரும்பா தகன். மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான். திருடனோடே பங்கிட்டுக்கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைப் பகைக்கிறான்; சாபத்தை அவன் கேட்டாலும் காரியத்தை வெளிப்படுத்தமாட்டான். மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரைநம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான். ஆளுகைசெய்கிறவனுடைய முகதரிசனத்தைத் தேடுகிறவர்கள் அநேகர்; ஆனாலும் அவனவனுடைய நியாயம் கர்த்தராலே தீரும். நீதிமானுக்கு அநியாயக்காரன் அருவருப் பானவன்; சன்மார்க்கனும் துன்மார்க்கனுக்கு அருவருப்பானவன். **- நீதிமொழிகள் 29: 14-27**

***தொடரும்...***


கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2024
## சமய, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: April 27, 2024 (Saturday) 9.00 AM

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள் :**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2019 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2011 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2010 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

• மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

**ஏப்பிரல் 05, 2024க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..............................

குடும்பப் பெயர்: ..............................

பிரிவு: ..............................

பிறந்த திகதி: ..............................

தொலைபேசி எண், email: ..............................

..............................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

குறிப்பு:
1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4ஆவது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email : canadahindumaamantram@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.451.8427, 647.620.5171 / 416.532.7897, 416.356.7323, 416.497.4741, 647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: ஏப்பிரல் 05, 2024**

# “அமரர் இலக்கியக் கலாநிதி கவிஞர் விநாயகர் கந்தவனத்தோடு எனக்கேற்பட்ட மறக்கமுடியாத சில அனுபவங்கள்”



யாழ்-வசாவிளான் மத்திய மகா-வித்தியாலயத்தில் 1963-1969 காலப்பகுதியில் குறிப்பாக எட்டாம் வகுப்பில் படிக்கும் போது அமரர் கவிநாயகர் கந்தவனம் எனக்கு புவியியலும் ஆங்கிலமும் படிப்பித்ததோடு எனது வகுப்பாசிரியராகவும் விளங்கியவர். குறிப்பாக அமரர் கவிநாயகர் ஒரு பிரபல நல்லாசிரியராகவும் நல்ல பல்லாளுமை மிக்கவராகவும் (Multi-Skills) அக்காலத்திலும் இக்காலத்திலும் வாழ்ந்தவர். குறிப்பாக அக்காலப்பகுதியில் அவர் ஏற்படுத்திய ஒழுக்கத்தாக்கங்கள் எனது மனத்தில் இன்றும் பசுமையாக இருக்கின்றன. சுருங்கக்கூறின் தாரமும் குருவும் அவரவரது தலையெழுத்து என்னும் கூற்றுக்கிணங்க அமரர் கவிநாயகர் கந்தவனத்தை எனது இடைநிலைப்பள்ளி ஆசிரியராகக் கொண்டமை எனது வாழ்க்கையில் பெரிய பாக்கியமே என்று கூறவேண்டும்.

“எழுத்தறிவித்தவன் இறைவனாகுவான்” என்னும் ஔவையாரின் கூற்றின்படி அமரர் கவிநாயகர் கந்தவனத்தின் மாணவ - ஆசிரியத் தொடர்பு ஒரு தெய்வீகத் தொடர்பாகும். அதாவது அவரது மாணவ - ஆசிரியத் தொடர்பு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என ஒரு தெய்வீகத்தன்மை நிறைந்ததாக அமைந்திருந்தது. அவர் எப்போதும் “Do not waste your time. Do something” என்று கூறியதை அவரது வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமாகக்கொண்டு கனடாவிலும் தனது வாழ்வின் இறுதிமூச்சுவரை செயற்பட்டுவந்தவர். எனது பால்ய நண்பரான சிவா முத்துலிங்கம், செயலாளர், ஒன்றாறியோ இந்துசமயப் பேரவை, நேற்றுக் குறிப்பிட்டதுபோல அமரர் ஒன்றாறியோ இந்துசமயப் பேரவையில் பல ஆண்டுகளாகத் தலைவராகப் பணியாற்றியவர். இச்சபையின்மூலம் இந்துசமயத்தையும், தமிழ்மொழியையும் கனடாவில் வளர்க்கப் பல திட்டங்கள் வைத்திருந்ததாகவும் அவற்றையெல்லாம் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதாகவும் மனம்வருந்திக் கூறினார். சென்றவாரத்தில் எனது கட்டுரையில் குறிப்பிட்டதுபோல, யப்பானியப் பேராசிரியர், “கனடாவில் இந்துசமயத்தையும் தமிழையும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் வளர்ப்பதில் பெரும்பங்காற்றுகின்றார்கள்” என்பதைக் குறிப்பிட்டதில், கவிநாயகர் கந்தவனத்தின் பங்கு அளப்பரியபங்காகும். இன்று அமரரது மறைவு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதென்றே குறிப்பிடவேண்டும். அவர் எப்போதும் அதிகாலை 4 மணிக்கே எழுந்து தனது எல்லாக் காலைக்கடமைகளையும் முடித்துவிட்டு எட்டு மணிக்கு வசாவிளான் (MMV) மத்திய மகா வித்தியாலயத்துக்கு வந்துவிடுவார். அவர் எப்போதும் எமக்குக்கூறும் கூற்று என்னவெனில் அதிகாலையில் வசாவிளான் எம்எம்விக்குள் கால் எடுத்துவைக்கும்போது தான் ஒரு ஆலயத்திற்குள் காலெடுத்து வைக்கும் உணர்வைப் பெறுவதாகக் குறிப்பிடுவார். ஆகவேதான் இக்கட்டுரையில் மேலே குறிப்பிட்டதுபோல அமரரது மாணவ - ஆசிரியர் படிப்பித்தல் வாழ்க்கை ஒரு தெய்வீக வாழ்க்கையென்று குறிப்பிட்டிருந்தேன். அதாவது அமரர் இலக்கியக் கலாநிதி விநாயகர் கந்தவனத்தின் கல்விப்பணி குறிப்பாக அமரரின் ஆசிரியப்பணி உன்னத ஒழுக்கவிழுமியங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தது.



“குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்விஅழகே அழகு” என்னும் நாலடியார் பாடலுக்கு இலக்கணமாகவும்
“கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றயவை”

- குறள் -

அதாவது “ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. மற்றையவை எல்லாம் செல்வங்கள் ஆகா” என்னும் குறளில் உறுதியாக நம்பிக்கைகொண்டு தனது இறுதிமூச்சுவரை வாழ்ந்த மகத்தான பொக்கிசமாக வாழ்ந்தார்.

கவிநாயகர் கந்தவனம் எந்தவித சாதிவேறு-பாடுகளையும் கடந்து “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என, மாணவர்களைத் தரம் மட்டுமேகொண்டு கணித்து அவர்களது கல்விவளர்ச்சியில் தனது நுண்ணறிவினால் ஊக்கமளித்தவர். அண்மையில் மார்ச்சு 16ந் திகதி நடைபெற்ற அவரது இறுதி அஞ்சலிக் கூட்டத்தைக் காணொளியில் கண்டு அவரது இரங்கல் செய்தியில் அவரது பன்முகப்பட்ட ஆற்றல்களையும் பரிணாமங்களையும் அவரது “கோடி ஆங்கோர் ஏழைக்கு கல்வி புகட்டுதல்” தலையாய தர்மம் என்னும் மகாகவி பாரதியின் கூற்றுக்கு இணங்க அமரர் கவிநாயகர் தான் கல்விகற்பித்த இடங்களில் எல்லாம் மாணவர்களது வாழ்வில் ஒளியேற்றிவைத்த பெருந்தகையாளன் அமரர் கவிநாயகர் கந்தவனம் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக ஏலவே இக்கட்டுரையில் குறிப்பிட்டதுபோல அவர் எப்போதும் கூறும் சுலோகம் “Do not waste your time. Do something” என்னும் கூற்று என் இளவயதிலேயே தலைசிறந்த பண்புகளையும் ஆளுமைகளையும் தந்ததை அவரது பழைய மாணவர்களும் நண்பர்களும் புகழ்ந்து கூறியதைக் கேட்டு உள்ளம் பூரிப்படைந்தேன். இதற்குச் சான்றாக மலையகத்திலும், நைஜீரியாவிலும், அளவெட்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அவரது பழைய மாணவர்களுக்கும் அவர்களது கல்விவாழ்வில் நான் உட்பட அவர் உதவியதை மறக்கமுடியாது.

“அன்னசத்திரம் ஆயிரம் கட்டுதல் ஆலயம் பதினாயிரம் கட்டுதல் அன்னயாவிலும் புண்ணியம்” என்பது ஆழப்பதிந்து வாழ்வில் எவ்வாறு நேரநிர்வாகம் செய்து நாம் வாழ்வில் முன்னேற எப்போதும் ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டிருத்தல் வேண்டும் என்பதையும் காலத்தை ஒருபோதும் வீணாக்கக்கூடாது என்பதையும் தெரிந்துகொண்டு முன்னேற உதவியது. இவ்விடயத்தில் ஆங்கிலத்தைப்படி என்று கூறியதோடு தன்னால் முடிந்தமட்டும் ஊக்குவித்தார். இன்று நான் கனடாவந்து 3 பல்கலைக்கழகங்களில் M.A., Ph.D. மாணவனாக வருவதற்கு அவர் ஆங்கிலமொழியில் போட்ட அத்திவாரமே என்று பெருமையாகக் கூறுவேன். அவரது ஆங்கிலமொழிஆளுமை எம்மையெல்லாம் ஊக்குவித்தது என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. சுருங்கக்கூறின் அமரர் கவிநாயகர் கந்தவனம் ஆசிரியரோடு ஏற்பட்ட அனுபவத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். அவரது வார்த்தைகளில் கூறுவதானால் “Discipline is discipline. There is no compromise for discipline” எனலாம். அதாவது ஒழுக்கம் என்பதன் அர்த்தம் ஒழுங்கந்தான். அதற்கு எந்தவிதமான சமரசமும் கிடையாது. ஒழுக்கம் தவறினால் சிறைக்குத்தான் செல்லவேண்டும். அங்கேதான் உங்கள் வாழ்வு முடியும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கைகொண்டு அதன்படி ஒழுகுகின்றவர்களுக்கு ஓர் உதாரணமாக வாழ்ந்துகாட்டியவர் கவிநாயகர் கந்தவனம். நான் மேலே இக்கட்டுரையில் குறிப்பிட்டதுபோல அவரது இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் அவரது நண்பர்களும் மாணவர்களும் அமரரின் பன்முகஆளுமைகளை வியந்து கூறியவற்றில் பின்வரும் பண்புகளைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

1. அவரது நுண்ணறிவு
2. உலகளாவிய இந்துசமயப்பணி - அதாவது புலம்பெயர்ந்த நாடுகளில் ஆற்றிய இந்துசமயப்பணி, குறிப்பாகக் கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளைக் குறிப்பிலாம்.
3. அமரரின் எளிமையும் அடக்கமும்
4. அவரது குடுப்பப்பொறுப்பும் சேவை மனப்பான்மையும்
5. மிகவும் நல்லடக்கமான கட்டுப்பாடுடன்கூடிய ஒழுக்கநெறி

முடிவாகக் கூறுவதாயின் “In conclusion Bhagavad Gita says, “Late Kavinayakar Kandavanm’s soul will never die because of his devoted teaching and selfless actions. He was the embodiment of the Hindu Dharma. As Gita says, “Do your duty, renounce the fruits of action, avoid alteration to the fruits and attachment to inaction.”

“As a man discards worn clothes and put on new and different ones, so the embodied self and soul discards its worn out bodies to take on new ones”.

இக்கட்டுரையில் மேற்கூறிய அமரரது பண்புகளும், குணாம்சங்களும் வெறும் முகமனுக்காகக் கூறியஉபசார வார்த்தைகள் அல்ல. உண்மையில் அமரர் கவிநாயகர் கந்தவனத்தோடு பழகிய எம்மைப்போன்ற எல்லோரது அனுபவத்தில்கண்ட உண்மைகளாகும். இதனை மார்ச் 16ம் திகதி அவரது இறுதிஅஞ்சலியில் பங்குபற்றியவர்களின் சான்றுஉரைகள்மூலம் எம்மால் நன்கு அறியமுடிந்தது. இவையெல்லாம் அவரது உண்மையான உன்னத மனிதப்பண்புகளாகும்.



K. Ananthanathan, M.A., MSW, RSW
Registered Social Worker and Psychotherapist
with Ontario College of Social Workers and
Social Services Workers (OCSWSSW)

---

## வீணாவின் கவிக்கணை

நெருங்கி நெருங்கி சென்றாலும்
விலகி விலகிச் செல்லும்
உறவுகளைக்க கண்டு
நொறுங்கித்தான் போகின்றது
இதயம்,
கண் எதிரே தோன்றும்
உறவுக்கு கையருகே வர
விருப்பமில்லை என்றால்
அதற்காக ஏங்கி நிற்காமல்
நீயாகவே விலகிச்சென்று விடு,
அவர்கள் முந்துவதற்குள்.

# வெடுக்குநாறிமலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்ட தடங்கல்கள் தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை கண்டனம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

சிறிலங்கா அரசும் அதன் இராணுவ, போலீஸ் நிர்வாகங்களும் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் கைதுகள், நில அபகரிப்பு மற்றும் பொது மக்களின் அன்றாட செயற்பாடுகளில் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள், இடையூறுகள் தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை கண்டனத்தை தெரிவித்து கொள்கிறது.

கடந்த வெடுக்குநாறிமலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட ஆலய பூசகரின் கைதும் பக்தர்களின் கைதும் கண்டனத்துக்கு உரியதுடன் இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். மேலும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் விக்கிரகங்கள் மீள கையளிக்கப்பட்டு அவற்றினை அபகரித்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டிய அரச நிர்வாகம் அதற்கு மாறாக பல்லாண்டு காலமாக வழிபட்டு வரும் தமிழ் மக்களின் மீது அரச படைகளை ஏவி விட்டு அச்சுறுத்த முனைகின்றது. அடக்குமுறைகள்தான் எம் மக்களை போராட நிர்ப்பந்தித்தது என்ற யதார்த்தத்தை சிங்கள தேசம் புறக்கணித்தபடியால்தான் இன்று அது கையறு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறன கைதுகளும், தமிழர்களின் வழிபாட்டு உரிமைகளை தடுத்து வழிபாட்டு தளங்களை அபகரிப்பதும், தொல்லியல் திணைக்களம் போன்ற அரச இயந்திரத்தின் அங்கங்களை ஏவி விடுவதும், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தினை சிதைத்து துண்டம் துண்டமாக்கி அவற்றை சிங்கள பௌத்த அடையாளங்களால் உருமாற்றம் செய்து தொடர்ச்சியான நிலப் பரப்பினை கொண்ட தமிழர் தாயகம் என்ற எம் உரிமை கோரிக்கையை சிதைப்பது சிறிலங்கா அரசின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் திட்டமிட்ட மூலோபாயம் ஆகும்.

நல்லிணக்கம் பற்றிக் கூறி கொள்ளும் ரணில் அரசு, இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வது இலங்கை தீவில் நிலையான அமைதி, ஸ்திரத் தன்மை, வளர்ச்சி ஒரு போதும் சாத்தியப்படாது என்பதனை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சர்வதேச தளத்தில் பன்முனைப்பட்ட முடிவெடுக்கும் சக்திகளிடம் எடுத்துரைக்க வேண்டும் என்பதனை தோழமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரித்தானிய தமிழர் பேரவை கடந்த பல வருடங்களாக தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் இவ்வாறான இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சர்வதேச சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையிலும் எடுத்துரைத்து வருவது போன்று இப்பொழுது இடம்பெறும் ஐ.நா.மனித உரிமைக்கழக (UNHRC) மார்ச் மாதக் கூட்டத் தொடரிலும் தகமை வாய்ந்த முடிவெடுக்கும் மையங்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் பதிவு செய்யப்படும்.

இவ்வாறான தொடரும் நில ஆக்கிரமிப்பு, சமூக பொருளாதார அடிப்படைகளில் தமிழர் தேசத்தினை சிதைத்து பலவீனப்படுத்தல், தங்குநிலையில் வைத்திருத்தல், தாயகத்தில் தமிழ் மக்கள் வாழ முடியாத சூழ்நிலைகளை உருவாக்கி அவர்களை மண்ணிலிருந்து வெளியேற்றுவது, தமிழர் அரசியல் பிரதிநிதித்துவத்தை சிதைப்பதும் செயலிழக்கச் செய்வதுமான செயல்பாடுகளை இடைநிறுத்தி தம்மை தாமே நிர்வகிக்கக் கூடிய இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றினை உடனடியாக உருவாக்குமாறு இந்தியா உட்பட சர்வதேச தளப் பரப்பில் முக்கிய உறுப்பு நாடுகளிடம் எமது இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

# சிங்கள தேசியம் தமிழர்களை சர்வதேசத்தின் பார்வையில். ஒரு குறுந்தேசிய இனமாக மாற்றும் திட்டத்தைக் கொண்டுள்ளது

## த.வி.கூ. கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து தெரிவிப்பு



**(கனகராசா சரவணன்)**

சிங்கள தேசியம் தமிழர்களை சர்வதேசத்தின் பார்வையில் ஒரு குறுந்தேசிய இனமாக மாற்றும் திட்டத்தைக் கொண்டுள்ளது. எனவே நாம் தமிழ் தேசத்தை தமிழ்ழீழம் என அழைக்க வேண்டும் என்று - த.வி.கூ. கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள தேசியம் தமிழர்களை சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ஒரு குறுந்தேசிய இனமாக மாற்றும் திட்டம் கொண்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அதனடிப்படையில் தமிழர்களின் பிரச்சனையை ஒரு கால் பந்தாட்டம் போல அங்கும் இங்கும் உதைத்து வருகின்றனர் எனவே தமிழ் தேசியத்தின் பற்றாளர்கள் அரசியல் தலைவர்கள் அனைவரும் தமிழ் தேசத்தை பற்றி பேசும் போது. “தமிழீழம்” என்ற வார்த்தையை பாவியுங்கள் அப்போது தான் நாங்கள் எமது இலக்கை அடையமுடியும் என தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோவிந்த வீதியிலுள்ள கட்சியின் புதிய தலைவராகக தெரிவு செய்யப்பட்ட அருண் தம்பிமுத்துவின் காரியலாலயத்தில் 18-03-2024 திங்கட்கிழமை அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“நாங்கள் முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம் தமிழர்களாகிய எங்களுக்கு அரசியல் தீர்வு இதுவரை வந்தபாடில்லை பொருளாதார நிலையும் மந்தமாக இருக்கின்றது அதேபோல எமது மக்களின் வாழ்க்கையும் பல சவால்களுக்கு மத்தியில் முன்னெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் குடிபரம்பல் வீழ்சியடைந்து தமிழீழத்தின் சிலபாகங்களான அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் தமிழர்களின் தொகை ஒரு இலச்சத்துக்கு குறைவாக காணப்படும் நிலை இருக்கின்றது அதேபோல வன்னி மட்டக்களப்பில் கூட எமது மக்கள் தொகை குறைந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழர்கள் வெவ்வேறு குழுக்களாக வெள்வேறு கட்சிகளாக பிரிந்து கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகின்றது தமிழ் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய 1975 அந்த காலத்திலே மாபெரும் தலைவர்களான தலைவர் செல்வநாயகம் ஜீ.ஜீ பொன்னம்பலம் வெள்வேறாக இருந்தும் இரு துருவங்களும் ஒன்றினைந்து கட்டியதுதான் தமிழ் விடுதலைக் கூட்டணி.

இந்த கட்சி வரலாற்று கடமையும் பொறுப்பு மிக்க மக்கள் அமைப்பு தமிழர்கள் ஒரு தேசம் ஒரு தேசிய இனம் சுயநிர்ணய உரிமை கொண்ட என்ற அடிப்படையில் வட்டுக்கோட்டை பிரகடனத்தை மேற்கொண்டு 1977 தேர்தலில் ஒரு கொள்கையின் அடிப்படையில் மக்கள் ஆணையை பெற்றது.

தமிழ் மக்களை ஒரு சுயாதீன மக்கள் கூட்டமாக இருந்து வந்ததை 1983ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 6ம் திருத்தச்சட்டம் மூலம் அந்த கொள்கை முறையை முன்வைக்க முடியாத நிலையை கொண்டு வந்தது அதன் பின்னர் உருவாகிய அனைத்து போராட்டங்களின் அடித்தளமும் அந்த உரித்தும் மக்கள் ஆணையால் தமிழ் விடுதலை கூட்டணிக்கு வழங்கப்பட்டது.

அரசியல் தீர்வு விடையத்தில் 1949 ம் ஆண்டில் இருந்து பேச்சுவார்த்தைகளை நடாத்தி கூட பலனின்றி பல வழிகளை தேடியவர்கள் நாங்கள் 1972 பின்னர் நாங்கள் ஒரு தெளிவான நிலைக்கு வந்தோம்.

ஆங்கிலேயர் விட்டுச் சென்ற காலத்திலே தமிழ்களும் சிங்களவர்களும் இந்த தீவில் பூர்வீக குடிகளாக வாழ்ந்து வந்துள்ளனர் அதற்கான ஆயிரத்துக்கு மேற்பட்ட சான்றிதழ்கள் இருக்கின்றது சீன தளபதி அட்மிரல் செங் கோ கோட்டை இராஜதாணியத்தை தாக்கி கைப்பற்றிய போது அந்த கோட்டை இராஜ்சியத்தின் அரசனின் கைது செய்தனர் அவரின் பெயர் வீரஅலகேஸ்வரன் என்ற தமிழன் இன்று கூட சீனர்கள் விட்டுச் சென்ற கல்வெட்டில் தமிழிலும் சீனமொழியிலும் இருக்கின்றது.

எனவே தமிழர்கள் பூர்வீக குடிகள் என்பதில் எந்த விதமான கேள்வியும் இருக்கமுடியாது ஆங்கிலேயர் விட்டுச் சென்ற உடன் சிங்கள தேசம் இலங்கை தீவுக்கான கட்டமைப்பு வெறுமனவே சிங்கள தேசத்திற்கு அடிப்படையாக வரவேண்டும் என்பதற்காக எடுத்த அந்த முடிவில் தமிழர்களை ஒரு குறு தேசிய இனமாக அடையாளப்படுத்தினர்.

தமிழர்கள் ஒரு தேசிய இனத்திற்கான இறமையை இழக்க நேரிடும் போது ஒரு தேச வரைவை உருவாக்குவதற்கான உரித்துடையவர்கள் அதனடிப்படையில் ஈழத்தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்களை எமது தாயகமாக பிரகடனப்படுத்தினோம் அந்த பிரகடணம் இன்றும் என்றும் மறுக்கவே மறைக்கவே முடியாது.

அந்த தாயத்திற்கு எப்படிபட்ட தீர்வு வரவேண்டும் என்ற கேள்வியை அனைத்து தலைவர்களும் பேசமுடியும். ஆனால் தேசம் தேசியம் சுர்யநிர்ணயம் என்பதை தமிழர்கள் விட்டுக் கொடுக்க முடியாதது எனவே தமிழீழம் என்ற வார்த்தையை இலங்கை 6ம் திருத்த சட்டம் எந்த தடையும் விதிக்கவில்லை எனவே தமிழர்கள் எமது தாயகம் தமிழீழம் என பாவிக்கவேண்டும்.

அரசியல் தலைவர்கள் வடக்கு கிழக்கு வடதமிழீழம் தென் தமிழீழம் என பாவிக்க வேண்டியதில்லை எனவே இதில் தமிழீழம் என பாவிப்பதில் எந்த விதமான சட்டசிக்கலும் இல்லை என்பததை அரசியல் தலைவர்கள் உணரவேண்டும்.

தமிழ் தலைமைகளுக்கு ஒருமித்த நாடு பிரிக்கமுடியாத நாடு என்று பேசவேண்டிய தேவையில்லை ஆனால் இலங்கை பிரிக்க முடியாது என்பதற்காக தமிழர்கள் தமது தேசத்தை மாநிலமாகவே அல்லது வேறு எந்தமுறையில் ஒரு சுயாட்சிமுறையில் உருவாக்கமுடியாது எனவே அதனை உணர வேண்டும் அதன் அடிப்படையில் எமது அரசியல் முன்னெடுக்க வேண்டும்.

அனைத்து அரசியல்கட்சிகளும் தேர்தல் காலங்களுக்காக மட்டும் இணைந்து ஆசனங்களை பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையை தாண்டி தமிழர்களின் அபிலாசைகளையும் தாண்டி தமிழர்களின் அடிப்படை உரிமைகளை நிலைப்பாடுகளை தெட்டதெளிவாக உணர்ந்து அந்த கொள்கை ரீதியாக இனையும் காலம் வரவேண்டும் தமிழ் தேசியம் பேசுபவர்கள் எல்லாம் தெட்டதெளிவாக தமிழர்கள் தேசிய இனம் தேசம் என்ற வரைபுக்குள் அரசியல் முன்னெடுக்க வேண்டும்.

இன்று இனப்பரம்பலில் வீழ்சியடைந்து கொண்டிருக்கும் இனம் இந்த இனத்திற்கு பிரிவுகள் தேவை இல்லை வெறுமனே தனிநபர்களுக்குள் உள்ள அரசியல் கொள்கை அல்லது தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளுக்காக தமிழினத்தின் எதிர்காலத்தை விலைக்கு விற்கமுடியாது.

தமிழ் விடுதலைக் கூட்டணி கட்சி ஆரம்பித்த காலத்தின் கொள்கையின் அடிப்படையில் பயணிக்கும். தமீழீழத்திலுள்ள அனைத்து பாகங்களிலும் உட்வேகத்துடன் தனது செயற்பாட்டை முன்னெடுக்கும் அதேவேளை சீர்திருத்தங்களை கொண்டுவருவோம். எனவே எமது மண்ணின் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அரசியலை முன்னெடுக்க ஒவ்வொருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணையவேண்டும் என அனைவருக்கும் வேண்டுகொள் விடுக்கின்றேன்.

அதேவேளை தமிழ் தேசியத்தின் பற்றாளர்களாக இருக்கின்ற அரசியல் பிரமுகர்கள் அனைவரும் எமது தேசம் தமிழீழம் என்ற வார்தையை பாவியுங்கள் அது நாடாளுமன்றத்திலா இருக்கலாம் சர்வதேச அரங்கே சர்வதேச ஊடகங்களுக்கோ வீட்டிலேயே பேசும் போது கூட அவ்வாறு அழைக்க வேண்டும். அப்போதுதான் எமது இலக்கை நாம் அடையமுடியும் என்றார்.

# யாழ்ப்பாண இந்திய தூதராகம் முன் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் போராட்டக்காரர்களுக்கு இடையூறு செய்த பொலிஸார்





யாழ்ப்பாண இந்திய துணை தூதராகம் முன் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட ஆயத்தமான மீனவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் தூதரக வாசலில் இருந்து அப்புறப்படுத்தினர்.

19-03-2024 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண கடற்பரப்பினுள் அத்துமீறிய இந்திய ரோலர் மீன்பிடியாளர்களைக் கட்டுப்படுத்துமாறு யாழ்ப்பாண இந்திய துணை தூதரகம் முன் மீனவ அமைப்புக்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அவ் இடத்திற்கு வந்த பொலிஸார் தூதரகம் முன் போராட்டம் நடத்த அனுமதிக்க முடியாது என தெரிவித்தார்.

இதன் போது முரண்பட்ட மீனவர்கள் தமது கோரிக்கை தூதரகத்திற்கு தெரிய வேண்டும் போராட்டத்திற்கு அனுமதிக்குமாறு கோரினர்.

இந்நிலையில் ஐந்து நிமிடம் தூதரகம் முன் நில்லுங்கள் எனக் கூறிய பொலிஸ், பின்னர் மீனவர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தினர்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1092

## மட்டக்களப்பு நரசிங்க வைரவசுவாமி கோயில் மட்டக்களப்பு

மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கோயில்களிலும், மரபுரீதியான பல சடங்குகள் தற்காலத்திலும் பழமை மாறாமல் கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்திலும் சடங்கின்போது நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளும், தொடர்ந்தும் மரபுரீதியாக கடைப்பிடிக்கப்படுவனவாகவே காணப்படுகின்றன. சடங்கின் மூன்றாம்நாள் இடம்பெறும் வட்டாமடை, குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. இவ்வாறே உற்சவத்தின் இறுதிநாளுக்கு முந்தையஇரவு நடைபெறும் பொங்கலும் சிறப்புடையது. இறுதிச்சடங்கின் முதல்நாளிரவன்று பொங்கல்செய்யப் பயன்படும் பானையை வீதிவலமாகக் கொண்டு வந்து ஆலய வாயிலிலே வைத்து பொங்கலிடுவர்.

இக்கோயிலின் சடங்குகள் ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து மறு வெள்ளிக்கிழமை நிறைவுபெறும். இறுதிநாளான வெள்ளிக்கிழமையன்று மதியபூசை ஆரம்பமானவுடன், மாரியம்மாளுக்கு சர்க்கரைஅமுது படைத்து வழிபாடு நடைபெறும். இதன்பின் தெய்வக்காரர்கள் ஊஞ்சலாடும் நிகழ்ச்சி இங்கு நடைபெறும் சடங்குகளில் மிகவும் விசேடமானது. இது சாதாரணமாக நாம் காணும் ஊஞ்சலாட்டத்தினின்றும் வேறுபட்டுக் காணப்படும்.

தெய்வக்காரரால் தெரிவுசெய்யப்பெற்ற ஆண்களே இதில் இடம்பெறுவர். இவர்கள் ஒரு தடித்த நீண்ட இரும்புக் கம்பியை, பக்கவாட்டில் எதிரெதிராகப் பிடித்துக் கொள்வர். அப்பொழுது தெய்வமாடுவோர் உருவேறிய நிலையில் தெய்வமாடிக் கொண்டே, அவர்களோடு சேர்ந்து பிடித்துக் கொள்வர். இவ்வாறான நிலையில் தண்டு பிடித்த அனைவரும் குனிந்தும் நிமிர்ந்தும் சுற்றிச் சுற்றி வருவார். இதனையே தெய்வங்களின் ஊஞ்சலாட்டம் என்று கூறுவார்கள். ஊஞ்சலாட்டத்தின்போது ஊஞ்சற்பாடற்கள் பாடுவார்கள். இப்பாடல்களிலே நரசிம்ம பைரவசுவாமியின் புகழ் பாடப்படுவதோடு, இக்கோயிலின் ஆரம்ப கர்த்தாவான, கந்தன் கதிர்காமர், மற்றும் ஆலயத்தை ஆக்கியவராகிய சின்னாவியார் ஆகியோருடைய பெயர்களும் இடம்பெறும்.

சின்னாவியார் பாடியுள்ள, மாரியம்மன் குளுத்திப் பாடல், நரசிங்க பைரவர் காவியம், வயிரவர் ஊஞ்சற் பாடல்கள் என்பன இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள தெய்வங்களின் அருட்பெருமைகளை எடுத்தியம்புவதாகக் காணப்படுகின்றன. சின்னாவியார் பெரியம்மை போட்டகாலத்தில் தனது மனதிலே பட்டவற்றை பாடி வேண்டியுள்ளார். வாய்வழிக் காவியமாகக் காணப்படும் இப்பாடல்கள் சடங்கு காலங்களிலே பாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

தேற்றாமரத்தடியில் ஆத்மார்த்த பூசையாக ஆரம்பிக்கப்பட்ட நரசிங்க பைரவர் ஆலயம், மக்கள் ஆதரவினாலும், இச்சுவாமீது கொண்ட நம்பிக்கையினாலும் வளர்ச்சிபெற்று, முறைப்படி ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. நரசிங்க சுவாமி எழுந்தருளத்தக்க முறையிலே இவ்வாலயம் அமைக்கப்பட்டாலும் இங்கு நடைபெறும் வழிபாடுகளும், சடங்கு முறைகளும் மட்டக்களப்பு மண்ணின் மணம் மாறாத அடிப்படை நிலையிலேயே தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இக்கோயிலின் அமைப்பு சிறு குடிலாக இருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்ற நிலையிலே காணப்படுகின்றது. அடிப்படைத் தன்மைகள் மாறாமல், ஆலயம் அமைத்து கருவறையிலே நரசிங்க பைரவ சுவாமியை எழுந்தருளச் செய்து, அருகில் அவரது அடையாளச் சின்னமான சூலத்தையும் நிறுவியுள்ளனர்.
புறவீதியில் விநாயகர், நாகதம்பிரான், ஆகியோருக்கு தனித்தனியான சந்நிதிகள் காணப்படுகின்றன. இவர்களை விட வீரபத்திரன், காளி, கிரக சாந்தி வைரவர், சிங்கநாத வைரவர், திரிசூலவைரவர், கங்காதேவி, வீரமாகாளி, காத்தவராயர், முதலான பத்தொன்பது தேவதைகளுக்கும் தனித்தனி மேடைகள் புறவீதியிலே அமைக்கப்பட்டுள்ளன. இம்மேடைகள் ஒவ்வொன்றும் மரத்தடியிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் நிர்வாகம் 1964ஆம் ஆண்டுவரை வண்ணக்குமார்கள் நிர்வாகத்திலேயே காணப்பட்டது. இவர்கள் நிர்வாகத்தில் பல பணிகள் மட்டக்களப்பு நரசிங்க பைரவ சுவாமி கோயிலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையிடம் ஆலயநிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறான சபை வருடத்திற்கொருமுறை கூடி, மக்களே நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றார்கள்.

ஆரம்பகாலத்தில் தனிப்பட்டவர்களால் நடத்தப்பட்ட ஆத்மார்த்த பூசை மறைந்து, திருக்கோயிலாக மாற்றம்பெற்றபின் இவ்வாலயத்திலே பூசகர்களே பூசைகளை நடத்தி வருகின்றார்கள். ஆதனவருமானம் எதுவுமின்றி ஆலயத்திற்கு மக்களால் வழங்கப்படும் வருவாயிலிருந்தே காலத்திற்குக் காலம் இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பெருந்தொந்தி, உருண்ட கண்கள், இருகடைவாய்களிலும் கோரப்பற்கள், அகன்ற மூக்குத் துவாரங்கள், கபாலமாலை, பாம்பினாலான அணிகலன்கள், யானைத் தோலாடை ஆகியன வைரவமூர்த்தியின் தோற்றப்பாடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆடைகளெதுவுமற்ற நிலையிலேயே இவர் பெரும்பாலும் சித்தரிக்கப்படுகின்றார். நரசிங்கவைரவர் என்ற பெயர் பயங்கரமானதோற்றத்தைக் குறித்தாலும், அக்கிரமத்தை அழித்து கருணைகாட்டவல்லவராக வைரவசுவாமி திகழ்கின்றார்.

*வளரும்...*





OM NAMO NARAYANA

**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**22-03-2024 வெள்ளி தொடக்கம் 28-03-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** கௌரவம் கூடும் வாரம். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். குடும்பச் சுமைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல் நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிடைக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். பிள்ளையால் பெருமை சேரும். சச்சரவுகள் அகலும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வெற்றியும், வெகுமதியும் கூடும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,8,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**ரிஷபம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். கனிவான பேச்சு ஆறுதல் தரும். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். விறுவிறுப்பான காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். செல்வாக்கு பெருகும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சி நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் பாசம் அதிகரிக்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உச்சிகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**மிதுனம்:** சுபிட்ஷங்கள் பெருகும் வாரம். காரியம் கைக்கூடும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வார்த்தையில் நிதானம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். இனிப்பான செய்தி வரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உண்மைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். தொழில் வழி தொல்லை குறையும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. ஆரோக்கியம் சீராகும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். இயந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. இனிய எண்ணம் உருவாகும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,3,5
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E




**கடகம்:** பொருள் வரவு திருப்தி தரும் வாரம். பெருமைகள் கூடும். காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் சேரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தடைகள் விலகும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகன செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொல்லைகள் குறையும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள், வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உடல் உ'ணம் வந்துபோகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 7,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** புதிய வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதாரம் மேன்மை தரும். குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இலக்கிய ஆர்வம் கூடும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திதி தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன் பிறப்புக்கள் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசு துறையில் ஆதாயம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். வேண்டாத விஷயங்கள் விலகும். உடல் நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பங்கள் தீரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிக்கை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,M




**துலாம்:** சாதனை படைக்கும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். செய்த்தொழில் லாபம் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். பாராட்டுக்கள் கூடும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். திருமண வாய்ப்பு தேடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருப்பு முனை ஏற்படும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,G




**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் வாரம். தங்க நகைகள் சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பொறுப்புக்கள் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமானம் திருப்தி தரும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் தள்ளிப்போடவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். ஆனந்தம் குடிக்கொள்ளும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். உடல்நலம் மேம்படும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான்,
அதிர்ஷ்ட எண்: 9,5,4,1, அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு
அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

*(தொடர்ச்சி 25 பக்கம்)*

# தமிழர்கள் எப்படி வாழவேண்டும் என சீனா, அமெரிக்கா, இந்தியா உட்பட எந்தவொரு வெளிநாடும் தீர்மானிக்க முடியாது

## தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து



தமிழர்களின் தேசம் தேசியம். சுயநிர்ணயம் என்ற இறையான்மையைன விடையங்களை பறிக்கும் அதிகாரமோ அன்றி தமிழர்கள் எப்படி வாழவேண்டும் என்ற தீர்மானமோ., சீனா, அமெரிகா. இந்தியா உட்பட எந்தவொரு வெளி நாடும் எடுக்கமுடியாது என தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் தலைவர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கட்சி காரியாலயத்தில் 20-03-2024 அன்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தேசம் தேசிய இனமா? அல்லது குறுந்தேசிய இனமா என்ற அடிப்படையில் அரசியல் நகர்வை முன்னெடுக்க போகின்றோமா? என்றதன் அடிப்படையில் எதிர்காலத்தை முன்னெடுக்க வேண்டும் அரசியல் பிரமுகர்கள் கூறிவார்கள் நாங்கள் ஒரு அரசியல் தீர்வை காணவேண்டும் என்றால் இந்த நாட்டுக்கு அல்லது அந்த நாட்டிற்கு ஆதரவாக செல்லவேண்டும் என இன்றைய யாதார்தம் பூலோக அரசியலில் போட்டி நடக்கின்றது சீனா ஒருபக்கம் அமெரிக்கா ஒருபக்கம், இந்தியா ஒருபக்கம் என ஒவ்வொரு நாடுகளும் தங்களது வெளிவிவகார கொள்கைகளுக்காக தங்களது தேவைக்காக முன்னெடுத்து வருகின்றன.

தமிழர்கள் எப்படி வாழவேண்டும் தமிழர்களின் தேசம் என்ற விடயத்திலே தேசியம் சுயநிர்ணயம் என்ற விடயத்திலே எந்தவொரு நாட்டிற்கும் எமது இறையான்மையை பறிக்கும் அதிகாரம் கிடையாது.

நாங்கள் இலங்கை தீவில் வாழுகின்றோம் என்ற அடிப்படையில. இந்த தீவின் சட்டங்களுக்கும் இறைமைக்கும் நாங்கள் பொறுப்புடையவர்கள். ஆனால் எமது எதிர்காலத்தை பார்க்கவேண்டும் என்ற அடிப்படையில் வெறுமனவே அரசியலுக்காக எமது அடிப்படை நிலைப்பாட்டில் இருந்து மாற முடியாது அவ்வாறு மாறினால் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு என்ற தீர்வு வரப்போவதில்லை.

இந்து சமுத்திரத்தில் தமிழர்கள் ஒரு பன்மையானகுடி தென்ஆபிரிக்கா, றிவூனியன் தீவில், மொரிசியஸ்தீவில், மலேசியா, தமிழ்நாட்டில், தமிழீழத்தில், போன்று இந்து சமுத்திர பிராந்தியத்தில் முக்கிய இனமா வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எனவே பூலோக அரசியலில் போட்டியில் ஒவ்வொரு நாட்டுக்கும் தமிழர்களின் ஆதரவு தேவை என்பதை நாங்கள் உணரவேண்டும்.

அதேபோல ஒவ்வொரு நாடுகளும் தமிழர்களது அபிலாசைகளையும் உரிமையையும் உணரும் தன்மை இருக்கவேண்டும் வெளிநாடுகளுக்கு எமது நிலைப்பாட்டை தெளிவாக கூறவேண்டும் தமிழர்களின் நிலைப்பாடு தொடர்ச்சியாக செல்லவேண்டும்.

நான் சிறுவயதில் வெளிநாடு சென்று திரும்பியபோது ஏன் இரு இனங்களும் ஒன்றாக வாழமுடியாது என நினைத்தவன் ஆனால் எனது அனுபவம் ஒரு விடயத்தை தெட்ட தெளிவாக காட்டுகின்றது இலங்கை தீவில் தமிழர்களை குறுந்தேசிய இனமாக மாற்றும் திட்டம் தான் சிங்கள தேசியத்திடம் உள்ளது.

ஜே.வி.பி ஒரு இடது சாரிகட்சி அவர்கள் தமிழர்களது உரிமையை அங்கீகரத்து இருக்க வேண்டிய கட்சி ஆனால் இன்று தமிழ் மக்களுக்கு தீர்வு தருவோம் அரசியல் செய்கின்றோம் சாப்பாடுதருகின்றோம் அது எல்லாம் கதையாகதான் இருக்கபோகின்றது.

ரணில், அநுரா, சஜித்து, ராயபக்ஸ, கோட்டா, சந்திரிக்கா உட்பட சிங்கள தேசத்தைச் சார்ந்த அனைத்து தலைவர்களும் சரி வலதுசாரிகட்சிகளாக இருக்கட்டும் இடதுசாரிகட்சிகளாக இருக்கட்டும் அனைவரும் உண்மையில் அடிப்படை யதார்த்த்தை உணர்ந்து தமிழர்களுக்கான ஒரு நேர்மையான கௌரவமான தீர்வை அததை ஏற்றுக் கொள்ளவேண்டும் ஆனால் அவர்கள் எவரும் தமிழர்களுக்கு தீர்வு வழங்கபோவதில்லை எனவே 70 வருட போராட்டத்தின் பின்னர் இந்த சிங்க அரசியல் கபடநாடகத்தை எல்லாம் தமிழ் தலைமைகள் விட்டுவிட்டு தெளிவான தெளிவு நிலைக்கு வரவேண்டும்.

தமிழ் தேசியத்துக்குள் அபிவிருத்தி தேவை நாங்கள் அரச கட்டமைப்பின் வெளியே தமிழர்களுக்கு என்ற ஒரு பொருளாதாரத்தை வளர்க்கவேண்டும் வெறுமனவே அரச உத்தியோத்திற்காகவும் இடமாற்றத்திற்காகவும் அரசியலை முன்னெடுத்து நமது இனம் எந்த எதிர்காலத்தையும் காணமுடியாது எனவே நாங்கள் தன்னிச்சையான பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் ஏற்படுத்தவேண்டும்.

அதேவேளை ஜளாதிபதி அதை செய்கின்றேன் இதை செய்கின்றேன் என யாழ் பலாலி சர்வதேச விமான நிலையத்தை உருவாக்கிவிட்டு அங்கு எந்திவிதமான விமானமும் இறங்க ஏற்படுத்தவில்லை ஏன்? அதன் அர்த்தம் என்ன தமிழர்களின் பொருளாதாரம் முடக்கப்படவேண்டும் அதேபோல தான் தமிழீழத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் எந்த அபிவிருத்தியும் முன்னெடுக்கப்படவில்லை.

மட்டக்களப்பில் விமான நிலையம் இருக்கின்றது ஆனால் பொலன்னறுவையில் சர்வதேசவிமான நிலையம் அமைக்கின்றனர் ஏன், இன்று அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா பதவில் இருந்தாலும் கூட தமிழீழ வடக்கு கிழக்கில் நீரியல் துறையில் எந்த அபிவிருத்தி முன்னெடுப்பும் செய்யமுடியாது ஏன் என்றால் அதுதான் இலங்கை சிங்கள தேசக் கட்டமைப்பு.

எனவே தொடர்ச்சியாக இதனை பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை தெளிவான முடிவுகளை எடுக்கவேண்டும் பாராளுமன்ற பிரதிநித்துவம் முக்கியம் தான் ஆனால் அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முன் அனைவரும் தெட்ட தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் தமிழர் பிரதிநிதிகளாகச் செல்பவர்கள் சிங்களதேசத்தின் கட்டமைப்பால் உருவாக்கப்படும் வசதிகள் அனைத்து சலுகைகளையும் பெற்று அரசியல் செய்யும் நிலை மாறவேண்டும் அப்போது தான் எமது மக்களின் பிரச்சனைகளை உணரமுடியும்.

சர்வதேச சட்டரீதியில் ஒன்றை உணரவேண்டும் தமிழ் மக்கள் 1977ம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனத்தின் அடிப்படையில் ஆனையை கொடுத்தார்கள் அதன் பின் பல கலவரங்களில் பல தமிழர்கள் உயிரிழந்துவிட்டனர் அதேபோல் பல தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழுகின்றனர்.

அன்று ஆனையை கொடுத்த மக்களின் வாரிசுகள் எல்லோரும் இந்த தமிழீழத்தில் வாழவில்லை எனவே அந்த மக்களின் உரித்தான தேசம். தேசியம் சுயநிர்ணய வரைபுகளை இன்று எவரும் மாற்ற முடியாது மாற்றவேண்டுமானால் 6ம் திருத்த சட்டத்தை நீக்கிவிட்டு வேனும் என்றால் தமிழ் மக்களிடம் ஒரு ஆனையை கோரமுடியும் எனவே தமிழ் தலைமைகள் ஒருமித்த நாடு பிரிக்கமுடியாத நாடு என்று பேசதேவையில்லை.

6ம் திருத்த சட்டத்தின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவதே அல்லது பதவிகளை வகிக்கும் போது அவர்கள் இலங்கையை பிரிக்க முடியாது என்ற அந்த கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இலங்கையை பிரிக்க முடியாது என்ற அடிப்படையில் தமிழர்கள் தமது தேசத்தை மாநிலமாகவே அல்லது மாகாணமாகவே அல்லது வேறு எந்தமுறையில் ஒரு சுயாட்சி முறையை உருவாக்க முடியாது என்ற இலங்கையில் எந்த சாதனத்திலும் இல்லை என்றார்.

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கடன் சுமை குறையும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிணி நீங்கும். திருப்தி ஏற்படும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். சகோதரியினால் நன்மை உண்டு. ஊக்கம் அதிகரிக்கும். கல்வி ஆர்வம் கூடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குதூகலம் தாண்டவமாகும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். காதல் எண்ணம் ஏற்படும். வழக்குகளில் செலவு ஏற்படும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பொன்னான தருணம். வளமான வாழ்வு அமையும். உலோகத் தொழில் லாபம் தரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதிப் பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். மனிதநேயம் மிகுதியாகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**மகரம்:** பொன், பொருள் சேரும் வாரம். மருத்துவச் செலவு உண்டு. மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மனோ தைரியம் கூடும். மனதில் இருந்த தேவையில்லா பயங்கள் நீங்கும். இறை விழிப்புணர்வு கூடும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். குதூகலம் தாண்டவமாகும். நன்மைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். தொழிலில் மந்த நிலை காணப்படும். சந்தோ'ம் அதிகமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** கலகலப்பான வாரம். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதிகள் கூடும். லாபம் திருப்தி தரும். உறவால் பண விரயம் ஏற்படும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். நல்லவர் நட்பு கிட்டும். வசதிகள் கூடும். ஆடை, அணிகலன் சேரும். கடவுள் பிரார்த்தனை கைகொடுக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஒற்றுமை அதிகரிக்கும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். முகப்பொலிவு கூடும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பறவைக-ளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசி தகவல் அலைச்சல் தரும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். புதுமையை விரும்புவீர்கள். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**மீனம்:** மங்களச் செய்தி வரும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு உயரும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். பணவரவு அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் நன்மை தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். பேச்சில் பணிவு தேவை. தொழில் அபிவிருத்தி அடையும். பழையக்கடன் வசூலாகும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பயணம் உற்சாகம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். வம்பு தும்புகள் ஒழியும். பாதிப்புக்கள் அகலும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தன்னம்பிக்கை அதிகமாகும். புகழும், பொருளும் பெருகும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C

# பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் : ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் ஒரு நாள் கெடு

பொன்முடிக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க கோரி தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், ஆளுநர் உச்ச நீதிமன்றத்துடன் விளையாட வேண்டாம் என கடும் கண்டனம் தெரிவித்துள்ள தலைமை நீதிபதி அமர்வு, இதுதொடர்பாக முடிவு எடுக்க ஆளுநருக்கு 24 மணி நேரம் கெடு விதித்துள்ளது.தமிழக உயர்கல்வித் துறை அமைச்சராக பதவி வகித்த பொன்முடி, கடந்த 200611 காலகட்டத்தில் அமைச்சராக இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவிப்பில் ஈடுபட்டதாக அவர் மீதும், அவரது மனைவி விசாலாட்சி மீதும் கடந்த 2011ம்ஆண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.இந்த வழக்கில் இருந்து இருவரையும் விடுதலை செய்து விழுப்புரம் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றம் கடந்த 2016ம் ஆண்டு தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து லஞ்ச ஒழிப்பு துறை போலீஸார் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்தவழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தமிழக அமைச்சராக பதவி வகித்த பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு 3 ஆண்டு சிறை தண்டனை மற்றும் தலா ரூ.50 லட்சம் அபராதம் விதித்து கடந்த டிச.19ம் தேதி தீர்ப்பளித்தது. இதனால் பொன்முடியின் அமைச்சர் பதவி பறிபோனது.கிபீஸ்மீகூஷீமீ வீஃமீ னீமீஸீமீ: 0:08சிறீஷீஃமீ றிறீணீஹ்மீகூஷீ இந்நிலையில், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பொன்முடி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்தவழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு விதிக்கப்பட்ட 3 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைத்தும், பொன்முடியை குற்றவாளி என அறிவித்த தீர்ப்புக்கு தடை விதித்தும் உத்தரவிட்டது.

ஆளுநர் நிராகரிப்பு: இதையடுத்து, எம்எல்ஏவாக பொன்முடி தொடர்ந்து நீடிப்பதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க கோரி,அதற்கான



பரிந்துரையை ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதல்வர் ஸ்டாலின் அனுப்பி வைத்தார். ஆனால், ஆளுநர் அந்த பரிந்துரையை நிராகரித்தார்.இதைத் தொடர்ந்து, தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆளுநருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அதன் விவரம்:தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் மனு சிங்வி, பி.வில்சன்: பொன்முடிக்கு தண்டனை விதித்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், மீண்டும் அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுக்கும் ஆளுநரின் செயல் நீதிமன்ற அவமதிப்பாகும்.

உச்ச நீதிமன்ற உத்தரவை மீறி ஆளுநர் செயல்பட்டு வருகிறார்.தலைமை நீதிபதி உள்ளிட்ட நீதிபதிகள்: ஆளுநர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? பதவிப் பிரமாணம் செய்து வைப்பது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்று அவர் கூறுவது வினோதமாக இருக்கிறது. அவருக்கு இந்த அதிகாரத்தை வழங்கியது யார். ஆளுநரின் செயல் அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது மட்டுமின்றி,எங்களுக்கும் கவலை அளிக்கிறது. ஆனால், அதை இந்த நீதிமன்றத்தில் நாங்கள் சத்தம்போட்டு கூற விரும்பவில்லை.

ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியவர்கள் சரியான ஆலோசனையை வழங்கவில்லை. உச்ச நீதிமன்றம் ஒருதண்டனையை நிறுத்தி வைக்கும்போது, அது ஒரு தண்டனையை தடுக்கிறது என்பது ஆளுநருக்கு தெரியாதா. மனுதாரருக்கு மீண்டும் பதவிப் பிரமாணம் செய்து வைக்க மறுத்ததன் மூலம், உச்ச நீதிமன்றத்தை அவர் அவமதித்துள்ளார்.

இந்திய செய்திகள்

அரசியல் சாசனத்தை ஆளுநர் முறையாக பின்பற்றாவிட்டால், மாநில அரசு என்ன செய்யும். ஜனநாயக முறைப்படி மனுதாரருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு முதல்வர் பரிந்துரை செய்துள்ளார். அதை ஆளுநர் எப்படி நிராகரிக்க முடியும். முதல்வரின் தனிப்பட்ட அதிகாரத்தில் ஆளுநர் எப்படி தலையிட முடியும். அவருக்கு சட்டம் தெரியுமா, தெரியாதா. அவருக்கு மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் தகுந்த அறிவுரை கூற வேண்டும். இல்லாவிட்டால், கடுமையான கருத்துகளை பதிவு செய்ய நேரிடும். குறிப்பாக உச்ச நீதிமன்றத்துடன் விளையாட வேண்டாம்.மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர்.வெங்கட்ரமணி: இந்தவழக்கை 22ம் தேதிக்கு (இன்று) தள்ளிவைக்க வேண்டும். இதுதொடர்பாக விளக்கம் கேட்டு தெரிவிக்கிறேன்.பி.வில்சன்: தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை எதிர்த்து ஒவ்வொரு முறையும் நாங்கள் இவ்வாறு நீதிமன்றத்தைத்தான் நாட வேண்டுமா?நீதிபதிகள்: குற்ற வழக்குகளில் நீதிமன்றம் தண்டனை விதித்து பிறப்பிக்கும் தீர்ப்புக்கு தடை விதிக்கப்பட்டால் இழந்த பதவி தானாக வந்துவிடும்தானே.தமிழக அரசு தரப்பு: பொன்முடி விவகாரத்தில் ஆளுநர்தான் தவறு இழைத்துள்ளார். இவ்வாறு வாதம் நடந்தது

# ராமநாதபுரம் தொகுதியில் ஓபிஎஸ் பாஜக கூட்டணியில் சுயேச்சை சின்னத்துடன் போட்டி என அறிவிப்பு



2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில், ராமநாதபுரத்தில் சுயேச்சை சின்னத்தில் தான் போட்டியிடுவதாக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.சென்னையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: “கடந்த பத்தாண்டு காலமாக, பிரதமர் நரேந்திர மோடி நல்லாட்சி தந்து வருகிறார்.

இன்றைய சூழலில் மூன்றாவது முறையாக பிரதமர் மோடி பிரதமராக வந்தால், அனைத்து நிலைகளிலும் இந்திய வளர்ச்சியடைந்த நாடாக மாறும். அதிமுக தொண்டர்களின் உரிமைகளை மீட்கின்ற குழுவாக, இருக்கும் நாங்கள் எங்களது முழு ஆதரவை தொண்டர்கள் பலத்தோடு தருவோம். பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி உடன் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தொண்டர்களின் கருத்தையும், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தலைமைக்கழக நிர்வாகிகள் என அனைவரையும் நாங்கள் கேட்டறிந்தோம். எங்கள் தர்ம யுத்தத்துக்கு அதிகமான தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் எங்களது கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

இரட்டை இலை சின்னத்தைப் பெறுவதுதான், எங்களுடைய இலக்கு. அதற்காக நாங்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறோம். அந்த உரிமையியல் வழக்கு தற்போது நிலுவையில் இருக்கிறது. எங்களது சட்டப்போராட்டம் தொடரும் நிலையில் மக்களவைத் தேர்தல் வந்துவிட்டது. இந்த மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு தொண்டர்களின் பலத்தை அறிய நாங்கள் 15 தொகுதிகளை கேட்டிருந்தோம்.இரட்டை இலை சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என்று முடிவு செய்திருந்தோம். ஆனால், அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாலும், காலதாமதம் ஏற்படுவதாலும், தொண்டர்களின் பலத்தை நிரூபிக்க வேண்டியிருப்பதாலும், ஒரு தொகுதியில் போட்டியிட்டு எங்களது தொண்டர்களின் பலத்தை காட்ட வேண்டும். இதற்காக, ஒரு தொகுதியில் போட்டியிட்டு எங்களது பலத்தை நிரூபிக்க இன்றைய கூட்டத்தில் நாங்கள் முடிவெடுத்தோம்.

சுயேச்சை சின்னத்தில்தான் நாங்கள் போட்டியிடுவது என்று முடிவெடுத்திருக்கிறோம். தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிடுவது என்று முடிவெடுத்திருக்கிறோம். வேட்பாளராக நான் போட்டியிடுகிறேன்” என்றார். அப்போது எம்எல்ஏவாக இருக்கும் நீங்கள் போட்டியிடுவது ஏன் என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், “ஒரு தொண்டரை நிறுத்துவதை விட, நானே களத்தில் நின்று, எங்களது பலத்தை நிரூபிக்க விரும்புகிறேன்” என்றார்.அதிகமான தொகுதி கேட்டதாகவும், ஒரே ஒரு தொகுதி மட்டும் கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு, “அவர்கள் எங்களுக்கு அதிகமான தொகுதிகளை கொடுத்தனர். ஆனால் இரட்டை இலை சின்னம் இல்லாமல், சுயேச்சை சின்னத்தில் அதிகமான தொகுதிகளில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்படும் என்பதால், பரிச்சார்த்தமாக ஒரு தொகுதியில் தொண்டர்களின் பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், ஒரு தொகுதியில் போட்டியிடுகிறோம்“ என்று அவர் கூறினார்.

# ‘கேஜ்ரிவால் கைது... சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ பொன்.ராதாகிருஷ்ணன் கருத்து



மதுபான கொள்கை தொடர்பான பண மோசடி வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை அமலாக்கத் துறை வியாழக்கிழமை கைது செய்தது. இந்நிலையில், இது குறித்து எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் கன்னியாகுமரி தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் பொன்.ராதாகிருஷ்ணன் கருத்து தெரிவித்துள்ளார்.

“விசாரணைக்கு ஆஜராகுமாறு கேஜ்ரிவாலுக்கு பலமுறை வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் விசாரணைக்கு வரத் தயாராக இல்லை. அதற்கு பல்வேறு காரணங்களைச் சொன்னார். சட்டத்தின் முன் அனைவரும் சமம்” என முன்னாள் மத்திய அமைச்சரான அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக, டெல்லி அரசின் மதுபானக் கொள்கை ஊழல் தொடர்பான பண மோசடி வழக்கு தொடர்பாக அம்மாநிலத்தின் 2 அமைச்சர்களை அமலாக்கத் துறை கைது செய்தது.

இருவரும் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இதுவரை ஜாமீன் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மாநில முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலிடம் விசாரணை நடத்த வேண்டும் என அமலாக்கத் துறை அவருக்கு சம்மன் அனுப்பியது. தான் எந்த தவறும் செய்யவில்லை என்று கூறி முதல்வர் கேஜ்ரிவால் விசாரணைக்கு ஆஜராக மறுத்து வந்தார். இந்த வழக்கில் தெலங்கானா முன்னாள் முதல்வர் கே.சந்திரசேகர ராவின் மகளும், மேலவை உறுப்பினருமான கவிதா, கடந்த 15ம் தேதி அமலாக்கத் துறையால் ஹைதராபாத்தில் கைது செய்யப்பட்டார். இந்த சூழலில் அரவிந்த் கேஜ்ரிவால் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL VACANT LAND CONSTRUCTION




**NESAN** **416-908-5656**
*Subramaniam*

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit • Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

Mortgage Alliance RightBroker = RightMortgage Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
·Loans
·Cash
·Debt Consolidation
·1st & 2nd Mortgage
·Home Renovation Loan
·Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1459 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday March 22, 2024

# ரொறன்ரொ "கைலாசா" அமைப்பின் சார்பில் மாகாண பாராளுமன்ற உறுப்பினருக்கு கையளிக்கப்பெற்ற 'THE UNITED STATES OF KAILASA' ஆங்கில நூல்



ரொறன்ரொ மாநகரில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "கைலாசா" அமைப்பின் சார்பில் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அரிஸ் பா- பிகியன் அவர்களுக்கு கையளிக்கப்பெற்ற **'THE UNITED STATES OF KAILASA'** என்னும் ஆங்கில நூல் பிரதியை அவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார். கடந்த 17ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் உலக "கைலாசம்" அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர். மேற்படி **'THE UNITED STATES OF KAILASA'** என்னும் ஆங்கில நூலில் உலகில் இந்து மதம் தோன்றிய வரலாறு மற்றும் இந்து மதம் எந்தெந்த மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பாதகமான விளைவுகளைச் சந்தித்தது மற்றும் "கைலாசம்" தேசத்தின் நடைமுறைகள் மற்றும் சட்டங்கள் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. இங்கே காணப்படும் படங்களில் ரொறன்ரோ "கைலாசா" அமைப்பின் பிரதிநிதி பாஸ்கரன் சின்னத்துரை அவர்கள் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஜஸ்ரின் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

--செய்தியும் படங்களும் சத்தியன்

# கனடா வாழ் இலங்கையர்கள் மத்தியில் இலங்கை தேசிய மக்கள் சக்தி கட்சின் அநுர திசாநாயக்க உரையாற்றுகின்றார்



இலங்கையின் தென்னிலங்கை அரசியலில் பலமிக்க ஒரு எதிர்க்கட்சியாகவும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ச சகோதரர்கள் ஆகியோரின் அரசியல் செல்வாக்கை முறியடிக்கும் வகையில் தீவிரமாக செயற்பட்டு வருபவரும் அண்மையில் இந்தியா மற்றும் அமெரிக்க அரசுகளினால் அழைக்கப்பெற்று கலந்துரையாடல்களை நடத்தியவருமான அநுர திசாநாயக்கா அவர்கள் கனடாவிற்கு வந்துள்ளார்.

கனடா வாழ் இலங்கையர்கள் மத்தியில் இலங்கை தேசிய மக்கள் சக்தி கட்சின் அநுர திசாநாயக்க அவர்கள் எதிர்வரும் 23ம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ரொறன்ரொ மாநகரில் உள்ள **Toronto Pavilion, 190 Rail-side Road, North York** மண்டபத்தில் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் மத்தியில் 'தீர்வு நோக்கிய மக்கள் சத்தியை கட்டியெழுப்ப' என்னும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தமிழ் மொழி பெயர்ப்பு வசதிகளும் செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுக் கூட்டம் தொடர்பான விபரங்களுக்கு:- 647 210 8771 அல்லது 647 767 4781 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

இங்கே காணப்படும் படத்தில் நேற்று வியாழக்கிழமை காலை அநுர திசாநாயக்க அவர்கள் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது ஆதரவாளர்கள் அவரை வரவேற்பதைக் காணலாம்.

# 19.03.2024 செவ்வாய்க்கிழமையன்று இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகள் ஆர்ப்பாட்டம்

## திடீரென வடக்கு கிழக்கு, மலையக தமிழ் கட்சிகள் இணைந்து ஆர்ப்பாட்டம்
## லக்ஸ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாச ஆதரவு, சுமந்திரன் தலைமறைவு

19-03-2024 செவ்வாய்க்கிழமையன்று இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் கட்சிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை திடீரென நடத்தின. இந்த உற்சாகமான செயற்பாடு பெரும்பான்மை இன உறுப்பினர்களை ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தியது.

வெடுக்குநாறிமலை சிவன் கோவில் விவகாரத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுவிக்ககோரி இந்தப் போராட்டம் நடைபெற்றது . மதச்சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு, மலையக தமிழ் கட்சிகள் ஆர்பாட்டம் செய்த போது லக்ஸ்மன் கிரியெல்ல, சஜித் பிரேமதாச ஆதரவு ஆகிய சிங்களத் தலைவர்களும் தங்கள் ஆதரவை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கிருந்து தலைமறைவானார் என்றும் அறியப்படுகின்றது. இந்த போராட்டத்தின்போது சஜித் பிரேமதாச அவர்கள் சிங்கள் உறுப்பினர்களுக்கு எதிராக கண்டனங்களைத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது



(உள்ளே செய்தி 9ம் பக்கத்தில்)

# தமிழரசுக் கட்சிக்குள் "தனி ஒருவனா?"



"ஜனாதிபதியை தமிழரசுக்கட்சி சந்தித்த போது அந்த சந்திப்பை புறக்கணித்த சுமந்திரன், ஜனாதிபதியின் அடுத்த சந்திப்புக்கான தமிழரசுக்கட்சியின் தலைவருக்கான அழைப்பை கட்சியும் தலைவரும் புறக்கணித்தபோது ""தனி ஒருவனாக"" பங்கேற்றது ஏன்?சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச்செய்யும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுப்பதுடன் கட்சிக்கு முரணா- கவும் செயற்படும் நிலையில் இதுவரையில் கட்சி ரீதியாக அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமை ஏன்?"

--கே.பாலா-

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

# "அடுத்தவர்களுக்கு வழிவிடும் தலைமைத்துவப் பண்பு எமது அரசியல் தலைவர்களிடம் இல்லை"

## பசுமை அமைதி விருதுகள் விழாவில் ஐங்கரநேசன் ஆதங்கம்



சிறந்த தலைமைத்துவப் பண்பின் வெளிப்பாடு தொடர்ச்சியாகத் தலைமைப் பதவிகளில் அமர்வது அல்ல. உரிய நேரத்தில் தலைமை வகிபாகத்தைப் பொருத்தமான இன்னொருவரிடம் கையளிப்பதுதான் தலைமைத்துவப் பண்புகளில் மிகவும் உயர்வானது. மற்றையவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கும் உயரிய இந்தத் தலைமைத்துவப் பண்பு மாணவர்களிடம் உள்ளது. ஆனால் அத்தியாவசியமான இந்தப் பண்பு இன்றைய எமது அரசியல் தலைவர்களிடம் அறவே இல்லை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா கடந்த ஞாயிறு (17.03.2024) யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது இவ்விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். (உள்ளே செய்தி 12ம் பக்கத்தில்)

உதயன்
உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
For Tickets and Information: 416 732 1608 or 647 762 9512
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM